விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 015 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 19 சனிக்கிழமை (03.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## அனைத்து வீட்டுத் திட்டங்களையும் தாமதமின்றி விரைவாக முடியுங்கள்

### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல்

(கொழும்பு)

அனைத்து வீட்டுத் திட்டங்களையும் தாமதமின்றி விரைவாக முடியுங்கள் என அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

தேசிய வீடமைப்பு மேம்பாட்டு அதிகாரசபையின் அதிகாரிகளுடன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தின் போது, 2026ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளின் கீழ் செயற்படுத்தப்படவுள்ள, குறைந்த

15ஆம் பக்கம் பார்க்க

## மாடுகளைத் திருடும் கும்பல் இளைஞன் மீது தாக்குதல்

### நாரந்தனை வடக்கில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக மாடுகளைத் திருடும் கும்பல் ஒன்று ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கில் இளைஞன் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் (01) மாலை 6.00 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த இளைஞர் அப்பகுதியில் உள்ள கடை ஒன்றுக்குப் பொருட்களைக் கொள்வனவு செய்யச் சென்ற போது,

14ஆம் பக்கம் பார்க்க

## - இராணுவத்துடன் இணைந்து -

# தனியார் காணியை அபகரித்தது

# பௌத்த துறவி செய்த மகா தவறு



### தையிட்டியில் நயினாதீவு விகாராதிபதி

(யாழ்ப்பாணம்)

- தையிட்டி மக்களின் போராட்டம் நியாயமானது.
- தையிட்டியில் காணி இழந்தவர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.
- நயினாதீவு நாக விகாரைக்குச் சொந்தமான தையிட்டியில் அமைந்துள்ள காணியிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க முடியும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## திஸ்ஸ விகாரைக்கு எதிராக இன்று கவனயீர்ப்புப் போராட்டம்

### அனைவரையும் அணிதிரளுமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிராக இன்று நடத்தப்படவிருக்கின்ற எதிர்ப்புப் போராட்டத்தில் கட்சிகள், மதத் தலைவர்கள், சிவில் அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொண்டு எதிர்ப்புக்களைப் பதிவு செய்யுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கோரிக்

15ஆம் பக்கம் பார்க்க

### திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட

## ஐந்து மாணவர்களின் 20ஆவது நினைவேந்தல்



15ஆம் பக்கம் பார்க்க

### தையிட்டி போராட்ட விவகாரம்

## வேலன் சுவாமி உட்பட ஐவருக்கு அழைப்பாணை

(யாழ்ப்பாணம்)


கடந்த பௌர்ணமி தினத்தன்று நடைபெற்ற சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் குறித்து வாக்குமூலம் பெறுவதற்கு வேலன் சுவாமிகள் உள்ளிட்ட ஐந்து பேருக்கு பொலிஸாரால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதி காலை

15ஆம் பக்கம் பார்க்க

### கொழும்பில் கலந்துரையாடிய பின் நடவடிக்கை

## தையிட்டி காணி விடுவிப்பு தொடர்பில் அரச அதிபரிடம் தையிட்டி விகாராதிபதி



(யாழ்ப்பாணம்)

கொழும்பில் உயர்மட்டக் கலந்துரையாடலின் பின் தையிட்டி காணி விடுவிப்புத் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்க முடியும் என தையிட்டி திஸ்ஸ விகாராதிபதி யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடம் தெரிவித்துள்ளார்.

தையிட்டி திஸ்ஸ விகாரையின்

15ஆம் பக்கம் பார்க்க

## நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு

- துப்பரவுப் பணியாளர்கள்
- பூங்கன்று பராமரிப்பாளர்கள்
- சமையல் உதவியாளர்

தேவை. ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள்.

தொடர்பு: 075 2549 186

(C-4734)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


## ஆசையாக வளர்த்த செல்லப்பிராணியைக் கண்டுபிடித்து தருபவருக்கு 100000 ரூபா சன்மானம்

முள்ளியவள்ளப் பகுதியில் வீட்டில் செல்லமாக வளர்க்கப்பட்டு வந்த ஜேர்மன் சப்போட் ஒன்று (கறுப்பு மற்றும் பிறவுண் கலர்-ஒன்றரை வயதுடையது) கடந்த இரண்டரை மாதத்திற்குள் காணாமல் போய்விட்டது.

இதனை யாராவது கண்டால் இது தொடர்பாக தகவல் தருபவர்களுக்கு 100000 (ஒரு இலட்சம்) ரூபா சன்மானம் வழங்கப்படும் என உரிமையாளர் அறிவித்துள்ளார்.

குறித்த ஜேர்மன் சப்போட் ( ஒன்றரை வயதுடையது) உங்களது வீடுகளுக்கு அருகில் உள்ள வீடுகளில் எங்காவது கண்டால் நீங்கள் தகவல் தந்தால் போதுமானது. அதனை மீட்பதற்குரிய நடவடிக்கைகளை உரிமையாளர் மேற்கொள்வதாகவும் குறித்த தகவல் இரகசியமாகப் பேணப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

எனவே உங்கள் வீடுகளுக்கு அருகில் கடந்த 26.10-2025 இரவுக்குப் பின்னர் புதிதாகக் கொண்டுவரப்பட்ட நாய்கள் இருப்பின் அதனைப் பார்வையிட்டு புகைப்படத்தில் உள்ள நாயாக இருப்பின் உடனடியாக தகவலை வழங்கி குறித்த சன்மானத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.





தொடர்புகளுக்கு :

077 128 1731, 077 962 6742

(C-4732)

## மருதங்கேணியில் குடும்பஸ்தர் படுகொலை சந்தேக நபர் கைதாகி மறியலில்

(கரணவாய்)

மருதங்கேணிப் பகுதியில் இளம் குடும்பஸ்தரைக் கத்தியால் குத்திக் கொலை செய்த சந்தேக நபரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் கிருசாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டார்.

புதுவருடமான நேற்று முன்தினம் வியாழக்கிழமை(01) வத்திராயன் வடக்கு தாளையடியைச் சேர்ந்த சின்னையா தவநேசன் (வயது - 40) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே குத்திக் கொலை செய்யப்பட்டு இருந்தார். இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த மருதங்கேணி பொலிஸார் அதே இடத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நேற்று வெள்ளிக்கிழமை (02) மருதங்கேணிப் பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்திய போது விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(ம-7,60)


## 23 வது ஆண்டை நோக்கி

RAVEENS EMC KARAVEDDY
(ENGLISH MEDIUM)

(Most Prominent Institution for ENGLISH MEDIUM in Srilanka)

- ஆரம்பம் : 03.01.2026 சனிக்கிழமை
- தரம் 6க்கான வகுப்புகள் (கல்வி மறுசீரமைப்புக்குரியது)
- தரம் 10ல் 3 மாணவர்களுக்கு அனுமதியுண்டு

தொகுதிப் பாடங்கள் :

01.English Literature 02.ICT 03.Commerce


SRILANKA and RAVEENS EMC
Both are CLEAN

P.Easwaranathan
(Director)

(C-4733)


## மரண அறிவித்தல்

பிறப்பு
25 - 08 - 1939



இறப்பு
01 - 01 - 2026

### பொன்னையா கதிரவேலு

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கச்சாய் தெற்கு கொடிகாமத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கதிரவேலு அவர்கள் கடந்த (01.01.2026) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்காளன சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பரமசாமி, தர்மலிங்கம், நாகேஸ்வரி மற்றும் சந்திரசேகரம், குணசேகரம், உதயகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கந்தசாமி, புவனேஸ்வரி, அருணாசலம், அன்னலட்சுமி, வள்ளிநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜேந்தி (பிரான்ஸ்), ஜேந்தன் (லண்டன்), ஜெயமிலா ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகேந்திரன், வேணுகேசி, ஆனந்தசோழன் ஆகியோரின் அன்பு மாமனாரும் வினுசன், பிரயங்கா, கோமிதா, அஜனா, றெஜினா, கனிகா, ரகீஸ், ஜெஸ்வின், கிதிபன், கஷ்தூரி, யதுசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக மதியம் ஒரு மணியளவில் எறியால்புட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கச்சாய் தெற்கு.
கொடிகாமம்.

077 707 0723

(1882)

## மரண அறிவித்தல்

### அதிரியாம்பிள்ளை மிக்கேல்நாயகம்



மலர்வு 08.05.1941 உதிர்வு 29.12.2025

யாழ். இளவாலையைப் பிறப்பிடமாகவும் யாழ், ஈச்சமோட்டை மற்றும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட அதிரியாம்பிள்ளை மிக்கேல்நாயகம் அவர்கள் கடந்த (29.12.2025) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அதிரியாம்பிள்ளை - மரியப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான தம்பியய்யா - நவமணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், யோகமலர் (ராணி) அவர்களின் அன்புக் கணவரும், மனோறஞ்சித் (றஞ்சித் - பிரான்ஸ்), வசிகரன் (வசி- பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை, அன்ரனி ஞானராஜா மற்றும் றீற்றா ஞானரெத்தினம், பீற்றர் ஜெயராஜா, ஜோசப் யோகராஜா, அலோசி யஸ், விக்ரர் வேதராசா (சுவிஸ்), செபஸ்ரியன் செல்வராசா (ராசா- ஜேர்மனி), ராஜேஸ்வரி (கிளி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் யோகராசா, பூமலர் காலஞ்சென்றவர்களான வரதராசா, அதிசயராசா மற்றும் சாந்தமலர் ஆகியோரின் மைத்துனரும் பிரதீபா (பிரான்ஸ்), வஷ்சலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரோஷான், அதிஷா, கனிஷ்கா, கவினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.01.2026) காலை 11 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை 1 avenue Marechal Juin, 95000 Gonesse இல் பார்வைக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (06.01.2026) செவ்வாய்க்கிழமை காலை 9.30 - 11.30 Salle de ceremonie 1 avenue Marechal Juin, 95000 Gonesse இல் நடைபெற்று பின்னர் பிற்பகல் 1.30 - 2.30 Crematorium de Champigny-sur-Marne Parking du cimitiere Coeuilly 560 Av. Maurice Thorez, 94500 Champigny-sur-Marne நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2.30 மணியளவில் Salle de l'arche 560 Av. Maurice Thorez,94500 Champigny-sur-Marne இற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கொள்கின்றோம்.

வசி(மகன்)- +33(6)5233 5870
தீபா(மருமகள்)- +33(6)2590
[illegible] +33(6)1966 7956
[illegible] +33(6)7015 4232

தகவல் :
மைத்துனன்
த.யோகராசா (பச்சடி)

(6473)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதியை வினைத்திறனாகச் செயற்படுத்தி

# சாதனை படைத்தது வடக்கு மாகாணம்

**(யாழ்ப்பாணம்)**

**2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில், 98 சதவீதத்துக்கும் அதிகமான நிதியை வினைத்திறனாகச் செலவு செய்து, இலங்கையின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வடக்கு மாகாண சபை முதலிடத்தில் இருப்பதாக வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஆர்.சிவரூபன் தெரிவித்தார்.**

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில், மாகாண பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், ஆணையாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுடனான 2026ஆம் ஆண்டுக்கான கடமை ஆரம்பிக்கும் விசேட நிகழ்வு, ஆளுநர் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

பிரதிப் பிரதம செயலாளர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் நூறு சதவீதக் கட்டு நிதியையும் நாம் திறைசேரியிடமிருந்து பெற்றுள்ளோம். கடந்த வருடம் 30ஆம் திகதி நள்ளிரவு வரையில் 98 சதவீதத்துக்கும் அதிகமான நிதியைச் செலவு செய்துள்ளோம். பௌதீக முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில் நாம் நூறு சதவீத இலக்கை எட்டியுள்ளோம்.

இந்த அடைவின் மூலம் இலங்கையிலுள்ள ஏனைய மாகாணங்களில் நாமே முன்னிலையில் உள்ளோம். இந்த வெற்றியைத் தக்கவைக்க, 2026ஆம் ஆண்டுக்குரிய வேலைத் திட்டங்களில் கொள்வனவு தொடர்பான பணிகளை ஆரம்பத்திலேயே தொடங்குவது சிறப்பாக அமையும் என்றார்.


இந் நிகழ்வில் கருத்து தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் சொல்வது சுலபம் ஆனால், அதனை நடைமுறைப் படுத்துவது கடினம். நாம் இங்கிருந்து கொள்கைகளை வகுத்தாலும், அதனை களத்தில் செயற்படுத்துபவர்கள் நீங்களே. அந்தச் செயற்பாடுகளின் போது நீங்கள் பெற்ற அனுபவங்களே எதிர்கால வெற்றிக்கு வழி வகுக்கும். பிரதம செயலாளர் முதல் கள உத்தியோகத்தர்கள் வரை அனைவரினதும் கூட்டு முயற்சியாலேயே இம்முறை எம்மால் நிதிப் பயன்பாட்டில் தேசிய ரீதியில் சிறப்பான அடைவை எட்ட முடிந்துள்ளது.

இருப்பினும், நாம் வெறும் நிதிப் புள்ளிவிவரங்களை மட்டும் பார்க்காமல், இத்திட்டங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதை நிச்சயம் ஆய்வு செய்ய வேண்டும் என மேலும் தெரிவித்தார். (க-8)

---

## கடந்த ஆண்டில்

## லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் சிக்கிய 76 அரச அதிகாரிகள்



(கொழும்பு)

2025 இல் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் 76 அரச அதிகாரிகள் கைது செய்யப்பட்டதாக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பொலிஸ் அதிகாரிகள் என்று அந்த ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. அதன்படி, மொத்தம் 24 பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் முன்னெடுக்கப்பட்ட 119 சோதனை நடவடிக்கைகளின் போது இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், 2025 நவம்பர் வரையிலான காலகட்டத்தில் ஊழல் மற்றும் மோசடிக்காக 7 அரசியல்வாதிகள் கைது செய்யப்பட்டதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவிற்கு இந்த 11 மாதங்களில் மொத்தம் 7 ஆயிரத்து 811 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

---

## பாடசாலை நேரம் நீடிக்கப்படமாட்டாது

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் அனர்த்த நிலைமை மற்றும் போக்குவரத்துச் சிக்கல்களைக் கருத்திற்கொண்டு 2026 ஆம் ஆண்டில் பாடசாலை நேரம் நீடிக்கப்படாது என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கான பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக, கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள கல்வி அமைச்சின் விசேட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள அரசு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் முதலாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் ஜனவரி 5 ஆம் திகதி ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தரம் 5 - 13 வரையான மாணவர்களுக்கு காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 வரை வழமையான நேர அட்டவணை தொடரும்.

தரம் 6 முதல் 13 வரை நாளொன்றுக்கு 7 பாடவேளைகள் இடம்பெறும் என்பதுடன், ஒரு பாடவேளைக்கு 45 நிமிடங்கள் ஒதுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு 2026 இல் தரம் 1 மற்றும் தரம் 6 மாணவர்களுக்குக் கல்வி மறுசீரமைப்புச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் எனவும், தரம் 6 ஆம் ஆண்டுக்கான உத்தியோகபூர்வ கல்வி நடவடிக்கைகள் ஜனவரி 21 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தரம் ஒன்றுக்கான மாணவர்களை உள்வாங்கல் செயற்பாடுகள் ஜனவரி 5 ஆம் திகதி ஆரம்பமாவதுடன், உத்தியோகபூர்வ கற்பித்தல் நடவடிக்கைகள் ஜனவரி 29 ஆம் திகதி ஆரம்பமாகும்.

அத்தோடு தரம் 1 மற்றும் 6 மாணவர்களுக்கான புதிய பாடப் புத்தகங்கள் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் வழங்கப்படும் என்றும், ஏனைய தரங்களுக்கான புத்தகங்கள் ஏற்கனவே வழங்கி முடிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)



---

## 21 ஆயிரம் சோதனைகள் 285 மில்.ரூபா அபராதங்கள்

(கொழும்பு)

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் இருந்து நுகர்வோர் விவகார அதிகாரசபை ரூ.285 மில்லியனுக்கும் அதிகமான அபராதங்களை வசூலித்துள்ளது.

2025 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் நடத்தப்பட்ட 21,000 சோதனைகளைத் தொடர்ந்து இந்த அபராதங்கள் விதிக்கப்பட்டதாக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

"1977" நுகர்வோர் முறைப்பாடுகள் ஹொட்லைன் மூலம் கடந்த ஆண்டு 5,002 முறைப்பாடுகள் பெறப்பட்டதாக அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது.

அதன்படி, பெறப்பட்ட முறைப்பாடுகளில் சுமார் 79 வீதம் தீர்க்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (நி)

---

## டித்வா சூறாவளி தாக்கம்; பெருமளவான சிறார்களுக்கு மனிதாபிமான உதவி தேவை

## யுனிசெப் தகவல்

(கொழும்பு)

டித்வா சூறாவளி காரணமாக நாடு முழுவதும் 22 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 12 இலட்சம் பேருக்கு, அதிலும் 5 இலட்சத்து 26 ஆராயிரத்து 609 சிறுவர்களுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுவதாக யுனிசெப் தெரிவித்துள்ளது.

டிசம்பர் 29 நிலவரப்படி 638 பேர் உயிரிழந்துள்ளனர், 175 பேர் காணாமல் போயுள்ளனர். 34 ஆயிரத்து 173 பேர் 358 பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள நிலையில், 2 இலட்சத்து 67 ஆயிரத்து 700 பேர் தற்காலிகமாக உறவினர் மற்றும் நண்பர் குடும்பங்களுடன் தங்கியுள்ளனர்.

தொடர்ச்சியான மழையால், குறிப்பாக பதுளை மாவட்டத்தின் 68% நிலப்பரப்பில் தொடர்ந்தும் நிலச்சரிவு அபாயம் அதிகமாக உள்ளது.

இந்த நிலையில், யுனிசெப் 6 இலட்சத்து 61 ஆயிரத்து 572 டொலர் மதிப்பிலான 55 அவசியப் பொருட்களை கொள் முதல் செய்துள்ளது. அத்துடன், 2இலட்சத்து 86 ஆயிரத்து 427 டொலர் மதிப்பிலான கல்விப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

அதேநேரம், பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு உடனடி, உயிர்காக்கும் உதவிகளை வழங்க 7.8 மில்லியன் டொலர் தேவைப்படுகிறது.

இதில், டிசம்பர் 30 நிலவரப்படி 3.5 மில்லியன் டொலர் பெறப்பட்டுள்ளதுடன், 2.6 மில்லியன் டொலர் உறுதிமொழியாக வழங்கப்பட்டுள்ளதாக யுனிசெப் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் கட்டணத்தை அதிகரிக்குமாறு மின்சார சபை முன்மொழிவு

**(கொழும்பு)**

**2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கான மின்சார கட்டணத்தை திருத்துவதற்கான திட்டத்தை இலங்கை மின்சார சபை இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளது.**

இந்த திட்டத்தின் படி, இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களுக்குள் ஒட்டுமொத்த மின்சார கட்டண்த்தை 11.57% அதிகரிக்க வேண்டும் என்று இலங்கை மின்சார சபை முன்மொழிந்துள்ளது.

இது தொடர்பான அதிகாரப் பூர்வ முன்மொழிவு 2025 டிசம்பர் 24 அன்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கான எதிர்பார்க்கப்படும் செலவு 1 இலட்சத்து 37ஆயிரத்து 016 மில்லியன் ரூபாய் ஆகும். மேலும், தற்போதுள்ள கட்டணங்களின் கீழ் உருவாக்கப்பட்ட வருவாய் 1 இலட்சத்து 13ஆயிரத்து 161 மில்லியன் ரூபாய் ஆகும்.

அதன்படி, 13ஆயிரத்து 094 மில்லியன் ரூபாய் வருவாய் பற்றாக்குறை இருப்பதால், இந்த 11.57% கட்டண உயர்வு அவசியம் என்று இலங்கை மின்சார சபை சுட்டிக் காட்டியுள்ளது. (நி)

# E-Traffic இல் புதிய வசதிகள்

(கொழும்பு)

வீதி விதிமீறல்களைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை பொலிஸாரால் அறிமுகப்படுத்தப்பட்ட 'E - Traffic' செயலியில் இந்த ஆண்டு புதிய வசதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த மேம்படுத்தப்பட்ட அமைப்பின் ஊடாக, பாதசாரிகள், பயணிகள் மற்றும் சாரதிகள் சட்டவிரோத வாகனம் ஓட்டுதல் அல்லது போக்குவரத்து விதி மீறல்களைக் கண்டால், அது குறித்து உடனடியாக பொலிஸ் தலைமையகத்திற்குத் தகவல் வழங்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டில் வீதி விபத்துகளினால் ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கை 322 இனால் அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டில் 2,287 பாரதூரமான வீதி விபத்துகள் பதிவாகியிருந்ததுடன், அவற்றின் மூலம் 2,388 உயிரிழப்புகள் ஏற்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், 2025 ஆம் ஆண்டில் பாரதூரமான விபத்துகளின் எண்ணிக்கை 2,562 ஆக உயர்ந்ததுடன், இதனால் ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கை 2,710 ஆக அதிகரித்துள்ளது. (நி)

## மின்னனு சாதனங்களுடன் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட தங்கம் மற்றும் மின்னணு உபகரணங்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


டுபாயிலிருந்து கடந்த டிசம்பர் 30 ஆம் திகதி நாடு திரும்பிய நபரொருவரிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இந்தக் கைது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைதான நபர் வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (நி)

# இந்திய மீனவர்களின் அட்டூழியங்கள் அதிகரிப்பு

## நெடுந்தீவுக் கடலில் அறுத்தெறியப்பட்ட வலைகள்



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பினுள் நேற்று முன்தினம் வியாழக் கிழமை அத்துமீறி உள் நுழைந்த இந்திய கடற்றொழிலாளர்கள் நெடுந்தீவு கடற்றொழிலாளர்களின் வலைகளை அறுத்து பல இலட்சம் ரூபாய் நட்டத்தினை ஏற்படுத்தியுள்ளனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தக் கோரி பல்வேறு போராட்டங்களை நடத்திய போதிலும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை எனவும் புத்தாண்டில் தம்மால் சுதந்திரமாக தமது கடல் எல்லைக்குள் தொழில் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டதாகவும் நெடுந்தீவு கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (நி-8-33)

## விசேட சுற்றிவளைப்பில் பலர் கைது

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பலர் கைது செய்யப்பட்டுள்ள தாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய 27 ஆயிரத்து 564 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் 535 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 16 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 98 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 96 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மது போதையில் வாகனம் செலுத்திய 501 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 30 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 3 ஆயிரத்து 133 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# உடுத்துறைக் கடற்கரையில் கரையொதுங்கிய மர்மப்பொருள்



(கரணவாய்)

யாழ். வடமராட்சி கிழக்கு - உடுத்துறை வேம்படி கடற்கரைப் பகுதியில் நேற்றைய தினம் மர்மப் பொருள் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

கடலில் நிலவும் கடும் காற்று மற்றும் கொந்தளிப்பால் குறித்த பொருள் கரைக்கு அடித்துவரப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

மக்கள் யாரும் அருகில் செல்ல வேண்டாம் என்றும் பாதுகாப்பு தரப்பினருக்கு சம்பவம் தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். (8-60-104)

# காரைநகர் கடற்பரப்பில் 11 இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் , காரைநகர் கடற்பரப்பினுள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு ஒரு படகில் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட 11 இந்திய கடற்றொழிலாளர்களையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 11 பேரையும் அவர்களின் படகினையும் மயிலிட்டி மீன்பிடித்துறை முகத்திற்கு கொண்டு சென்ற கடற்படையினர், படகினை மீன்பிடித் துறைமுகத்தில் தடுத்து வைத்துள்ளதுடன், கைது செய்யப்பட்ட 11 கடற்றொழிலாளர்களையும் கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (8-33)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(சாவகச்சேரி)

கனடாவில் வசிக்கும் மனிதநேய சமூக செயற்பாட்டாளர் காமலிற்றா "கல்விக்கு கரம் கொடுப்போம்" எனும் செயற் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் கே.கே.பி இளைஞர் கழகத்திற்கு வழங்கிய நிதிப்பங்களிப்பில் சாவகச்சேரி மகிழங்கேணி கல்வி நிலையத்தில் கல்விகற்கும் 40 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி உதவித்திட்டத்தை யாழ்ப்பாணம் கே.கே.பி இளைஞர் கழக அங்கத்தவர்கள் வழங்கி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் தொடரில் கிடைக்கும் இலாபம் முழுவதும் நாட்டுக்கே!

## ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் மாபெரும் அர்ப்பணிப்பு

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் இலங்கைக்கான விஜயத்தின் மூலம் கிடைக்கப்பெறும் இலாபத்தை அரசாங்கத்தின் "நாட்டை கட்டியெழுப்புவோம்" திட்டத்திற்கு நன்கொடையாக வழங்க ஸ்ரீலங்கா கிரிக்கெட் தீர்மானித்துள்ளது.

இதன்படி பாகிஸ்தான் தொடரின் மூலம் கிடைக்கப்பெறும் முழு இலாபத்தையும் அரசாங்கத்தின் மறுசீரமைப்புத் திட்டங்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நாட்டைத் தாக்கிய "டித்வா" சூறாவளியினால் ஏற்பட்ட அழிவுகளைத் தொடர்ந்து, அரசாங்கம் முன்னெடுத்துவரும் புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்புப் பணிகளுக்கு ஆதரவளிப்பதே இந்த முயற்சியின் முக்கிய நோக்கமாகும்.

இந்தத் தொடர் முழுவதும் பொதுமக்களிடையே இந்த திட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையை உலகளாவிய ரீதியில் விளம்பரப்படுத்தும் நோக்கில், போட்டிகள் நடைபெறும் மைதானங்களில் Visit SriLanka என்ற ஹேஷ்டேக் பயன்படுத்தப்படவுள்ளது.

இந்தத் தொடர் 3 ரி-20 போட்டிகளைக் கொண்டதாக அமையவுள்ளது.

இதற்கமைய இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# உலக மேசைப்பந்தாட்ட தரவரிசையில் இலங்கைச் சிறுவன் முதலிடம்!



இலங்கை மேசைப்பந்தாட்ட வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத ஒரு மைல்கல்லை எட்டி, 11 வயதுக்குட்பட்டோருக்கான உலகத் தரவரிசையில் 10 வயதான தாவி சமரவீர முதலிடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

அதன்படி, உலகத் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்த முதலாவது இலங்கை மேசைப்பந்தாட்ட வீரர் இவராவார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இத்தாலியில் நடைபெற்ற உலக இளையோர் மேசைப்பந்தாட்டப் போட்டியில் 11 வயதுக்குட்பட்டோர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றதன் மூலம், இலங்கையின் முதலாவது உலக இளையோர் சம்பியனாக அவர் உருவெடுத்தார்.

இந்த வெற்றியைத் தொடர்ந்தே அவர் உலகத் தரவரிசையில் உச்ச இடத்தை பிடித்துள்ளார்.

வெறும் 10 வயதேயான தாவி, 13 வயதுக்குட்பட்டோருக்கான உலகத் தரவரிசையில் 11ஆவது இடத்தைப் பிடித்து சிரேஷ்ட வீரர்களுக்கும் சவால் விடுத்து வருகிறார்.

சர்வதேச ரீதியில் இதுவரை 5 வெள்ளி மற்றும் 4 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ள அவர், உலக இளையோர் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற முதல் இலங்கையர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். (3)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# புத்தாண்டு கொண்டாட்டத்தில் பயங்கர தீ விபத்து!

## ◆ சுவிட்சர்லாந்தில் சோகம் ◆ 40 பேர் உயிரிழப்பு

## ◆ 100இற்கும் மேற்பட்டோர் படுகாயம்

**(ஜூரிச்)........................**
**சுவிட்சர்லாந்து நாட்டின் கிரான்ஸ் - மொன்டானா நகரில் உள்ள மதுபான விடுதியில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில், 40இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 100இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.**

சுவிட்சர்லாந்து நாட்டின் கிரான்ஸ் - மொன்டானா நகரில் பிரபலமான மதுபான விடுதி ஒன்று செயற்பட்டு வருகிறது. இங்கு ஆங்கில புத்தாண்டை கொண்டாடி மகிழ, 100இற்கும் மேற்பட்டோர் கூடியிருந்தனர்.

அந்நாட்டு நேரப்படி, அதிகாலை 1.30 மணிக்கு திடீரென பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. அங்கிருந்தவர்கள் அலறி அடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர்.

இந்தச் சம்பவத்தில் 40 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.


100இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. இறந்தவர்களில் வெளிநாட்டினரும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தீ விபத்துக்கு காரணம் பயங்கரவாத தாக்குதல்கள் இல்லை எனவும் மெழுகுவர்த்தி மற்றும் ஷாம்பெயின் போத்தல்களே காரணம் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (3)





## இங்கிலாந்தில் அமைக்கப்படும் பிரமாண்ட நினைவுச் சின்னம்



(லண்டன்)
இங்கிலாந்தின் வார்க்ஷயர் பகுதியில் தி எடர்னல் வால் ஆஃப் ஆன்சர்டு பிரேயர் என்ற பெயரில் சுமார் ஒரு மில்லியன் செங்கற்களைக் கொண்டு பிரம்மாண்டமான கிறிஸ்தவ நினைவுச் சின்னம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டம் பிரார்த்தனைகள் நிறைவேறிய நிஜ மனிதர்களின் நம்பிக்கையூட்டும் கதை களை உலகிற்குப் பறைசாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

லீசெஸ்டர் சிட்டி கால்பந்து கிளப்பின் முன்னாள் மத குருவான ரிச்சர்ட் காம்பிள் என்பவரால் இந்த 40 மில்லியன் பவுண்ட் மதிப்பிலான திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

சுமார் 12 பேருந்துகளின் உயரத்திற்கு அமையவுள்ள இந்த வெள்ளை நிற கொங்கிறீட் அமைப்பு, அந்நாட்டின் மிகப்பெரிய மதச் சின்னங்களில் ஒன்றாகத் திகழும் எனவும், அதனை ஒரு நாளைக்கு 8 இலட்சம் பேர் பார்வையிடுவார்கள் என்றும் கருதப்படுகிறது. (3)

## சொந்த நாணயத்தை கைவிட்டு யூரோவை பயன்படுத்தும் பல்கேரியா



(சோஃபியா)
ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏழ்மையான நாடாகக் கருதப்படும் பல்கேரியா, 2026 ஜனவரி 1 முதல் அதிகாரபூர்வமாக யூரோ நாணயத்தைப் பயன்படுத்தும் 21ஆவது நாடாக மாறியுள்ளது.

140 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்பாட்டில் இருந்த பல்கேரியாவின் "லெவ்" நாணயம் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டு, நேற்று முன்தினம் "நள்ளிரவு முதல் யூரோ அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, 1.95 லெவ் என்பது ஒரு யூரோ என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஜனவரி மாதம் முழுவதும் மக்கள் லெவ் மற்றும் யூரோ ஆகிய இரண்டையும் பயன்படுத்தலாம் என்றும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் யூரோ மட்டுமே செல்லுபடியாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தால் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்கும் என இளைஞர்கள் நம்புகின்றனர்.

ஆனால், பொருட்களின் விலை உயரும் என்ற அச்சத்தில் கிராமப்புற மக்கள் போராட்டங்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே 2026ஆம் ஆண்டுக்கான பாதீட்டுக்கு எதிராக நடைபெற்ற போராட்டங்களால் பிதமர் ரோசன் செலிகாஸ்கோவ் அரசாங்கம் அண்மையில் பதவி விலகியிருந்தது. இந்த அரசியல் ஸ்திரமற்ற நிலைக்கும் மத்தியிலேயே இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளதாக கூறப்படுகிறது. (3)

## அமெரிக்கரை திருமணம் செய்தாலும் கிரீன் அட்டை கிடைக்காது

### ட்ரம்ப் நிர்வாகம் புதிய கட்டுப்பாடு

(வோஷிங்டன்)
அமெரிக்கர்களை திருமணம் செய்தாலும், கிரீன் அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது என்று ட்ரம்ப் நிர்வாகம் புதிய கட்டுப்பாட்டை அறிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கு பல்வேறு நாடுகளில் இருந்து பலர் கல்வி மற்றும் தொழில் ஆகியவற்றுக்காக பல்வேறு விசாக்களில் செல்கின்றனர்.

அவர்களில் பெருமளவானோர் அமெரிக்க குடியுரிமை பெறுவதற்காக கிரீன் அட்டைகளுக்கு விண்ணப்பிப்பதாக கூறப்படுகிறது.

இந்தக் கிரீன் அட்டை ஒரு வெளிநாட்டவர், அமெரிக்காவில் நிரந்தரமாக வாழவும், தொழில் செய்யவும் சட்டப்பூர்வ உரிமையை வழங்குகிறது.

அதில் அமெரிக்கக் குடியுரிமை பெற்ற பெண் அல்லது ஆண் ஒருவரை திருமணம் செய்து கொள்பவர்கள், எளிதாக கிரீன் அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் தற்போது முறைகேடான முறையில், கிரீன் அட்டையைப் பெற்றுக் கொள்ள பலர் திருமணம் செய்து கொள்வதாக பல முறைப்பாடுகள் எழுந்தன.




இந்த நிலையில் குடியேற்றம் தொடர்பாக பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வரும் ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகம் தற்போது கிரீன் அட்டைகளுக்கு புதிய கட்டுப்பாட்டை விதித்துள்ளது.

அதன்படி அமெரிக்கக் குடிமகனைத் திருமணம் செய்து கொள்வது மாத்திரமே கிரீன் அட்டைக்கான உத்தரவாதம் அல்ல என்று அமெரிக்க குடிவரவு துறை அறிவித்துள்ளது.

அதற்கமைய, கணவன், மனைவி இருவரும் ஒரே வீட்டில் வசிக்கவில்லை என்றால், அவர்களின் கிரீன் அட்டை விண்ணப்பத்துக்கு சிக்கல் ஏற்படும் என்று கூறப்பட்டுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன உளைச்சலால் அதிக விபத்துக்கள்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

புத்தாண்டில் பதிவான போக்குவரத்து விபத்துகளில் 85 சதவீதம் மன ரீதியான காரணங்களால் பதிவான குற்றங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன,

மேலும் பொறுமை, ஒழுக்கம், போக்குவரத்துச் சட்டங்களை பின்பற்றாதது மற்றும் உரிய கவனிப்பு இல்லாமை ஆகியவை அந்த மன ரீதியான காரணங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

போக்குவரத்து விபத்துகளில் சுமார் 15 சதவீதம் இயந்திரக் குறைபாடுகளால் நிகழ்கின்றன, மேலும் ரயர்கள், பிறேக்குகள், சிக்னல் விளக்குகள் மற்றும் நிலையற்ற நிலைமைகள் உள்ளிட்ட அனைத்து காரணிகளும் இயந்திரக் குறைபாடுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன .

முந்திச் செல்வது, இடது மற்றும் வலதுபுறம் திரும்பும்போது கவனக் குறைவாக நடந்து கொள்வது ஆகியவை போக்குவரத்து விபத்துகளுக்கு முக்கிய காரணிகளாகும்.

2024 ஆம் ஆண்டில் 2,287 சாலை விபத்துகளில் 2,388 பேர் அகால மரணமடைந்ததாகவும், கடந்த ஆண்டு 2,562 சாலை விபத்துகளில் 2,710 பேர் அகால மரணமடைந்ததாகவும் கடந்த ஆண்டையும் அதற்கு முந்தைய ஆண்டையும் ஒப்பிடும்போது, கடந்த ஆண்டு 322 பேர் கூடுதலாக இறந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1995- NRC+இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம் : 5'6"
தகைமை/தொழில்:BSC, MSC, MBA, லண்டன்
எதிர்பார்ப்பு: PR உள்ளவர்
தொ.இ: B/16395

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்:ரோகினி
கி-பா- 23 1/2
உயரம் :5'10"
தகைமை/தொழில்-BSC,Director
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16397

பிறப்பு:1988-இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
உயரம் :5'10"
தகைமை/தொழில்: BSC,MSC,Civil Engineer(UK)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16399

பிறப்பு: 1995- இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
8இல்செவ்
கி-பா- 38 உயரம்:5'8"
தகைமை/தொழில்-A/L.கமம்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16400

பிறப்பு: 1996- இந்து
நட்சத்திரம் :பூராடம்
கி-பா- 36 1/2
12இல் சூரிசெவ்
உயரம்:5'7"
தகைமை/தொழில்: BSc,MSc, engineer(London)
எதிர்பார்ப்பு: BSc Degree,Engineer
தொ.இ: B/15294

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-1987 - இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி-பா-42 1/2
8இல்சூரிசெவ்
உயரம் : 5'5"
தகைமை/தொழில்: Dip in English,IT
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/14726

பிறப்பு -1987 - இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 6 1/2
தகைமை/தொழில் - MBBS,Doctor
எதிர்பார்ப்பு - Doctor, Engineer
தொ.இ: G/14734

பிறப்பு-1987-இந்து
நட்சத்திரம்-பூரட்டாதி
1இல்செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/14745

பிறப்பு-1987- இந்து
நட்சத்திரம்-ரேவதி
கி-பா-21 1/4
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14752

பிறப்பு-1988- இந்து
நட்சத்திரம்-சுவாதி
கி-பா-58 1/4
2இல் செவ்
உயரம் -5'7"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/14678

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 511



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## எலெக்ட்ரானிக் புத்தகங்கள்!

ஒரு எழுத்தாளர் மிகவும் கவலையோடு வந்தார். "என் எழுத்தினுடைய மதிப்பை இந்த மக்கள் புரிந்து கொள்கிறார்கள் இல்லை சார்!" என்றார். ஏன் அப்படி சொல்கின்றீர்கள் என்றேன். இதுவரைக்கும் 20 புத்தகம் எழுதியிருக்கிறேன். எல்லாம் மளிகைக் கடையிலே தான் இருக்குது. கிழித்து பொட்டலம் கட்டுவதற்கு! என்றார். அது எப்படி மளிகைக்கடைக்குப் போனது? என்றேன். எல்லாம் எடை போட்டு வித்திருக்கின்றார்கள் சார்! என்றார். உங்கள் எழுத்தினுடைய வெயிட் என்ன என்பது படித்தவர்களுக்கு தெரிந்திருக்கு சார்! அதுதான் எடை போட்டு வித்திருக்கின்றார்கள் என்றேன்.

ரொம்ப வேதனையோடு சிரித்தார். பழைய பேப்பர் கடையில் போட முடியாத அளவுக்கு ஒரு புத்தகம் எழுதிக்காட்டுகிறேன் பாருங்கள் ! என்றார். "அது நிச்சயம் உங்களாலே முடியும்!"என்றேன். எப்படி? என்றார்.இன்னும் கொஞ்ச நாட்களிலே எலெக்ட்ரானிக் புத்தகங்கள் வரப்போகுது. அதையெல்லாம் அவ்வளவு சுலபமாக கடையில் போட்டு விடமுடியாது! பொட்டலம் கட்டவும் உபயோகப்படாது!" என்றேன்.

அவருக்கு ரொம்ப சந்தோஷம். விபரம் கேட்டார். சொன்னேன். கணனியிலே கதை படிக்கிற காலம் நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. புத்தகம் தலையணை மாதிரி இருக்கே. இதை எப்படித் தூக்கிக்கொண்டு போகின்றது என்ற கவலையெல்லாம் வேண்டாம். பெரிய பெரிய அகராதி கலைக்களஞ்சியம் எல்லாவற்றையும் "கணணி சிப்களிலே பதிவு செய்து வைத்துக் கொள்ளலாம். இதே மாதிரி இப்ப நாவல்களையும் செய்துகொண்டு வருகின்றார்கள்! அதற்கான ஏற்பாடு இப்போது அமெரிக்காவிலே நடந்துகொண்டிருக்கிறது. கணனியிலே கதை படிக்க வேண்டும் என்றால் அதற்கு அடிப்படையாக மூன்று விடயங்கள் தேவையாம்!

ஒன்று: கையிலே எடுத்துக்கொண்டு போவதற்கு வசதியாக ஒரு குட்டி கணனி.

இரண்டாவது: கணனியிலே கதையைப் படிக்க உதவுகின்ற மென் பொருள்.

மூன்றாவது டிஸ்க்குகள் அவ்வளவு தான்.

கதை டிஸ்க்கை செருக வேண்டியது உடனே கம்ப்யூட்டர் திரைக்கு உயிர் வந்துவிடும். வழக்கமாக பச்சை நிறத்திலே, சாம்பல்நிறத்திலே திரை தெரியும். இதிலே அப்படி இல்லை. புத்தகம் மாதிரியே இருப்பதற்காக வெண்திரை தெரியும். அதிலே நாவலின் ஒரு பக்கம் தெரியும். அதை படிக்கவேண்டியது, படித்து முடித்தவுடனே ஒரு பொத்தானை அழுத்தினால் பக்கம் மாறும். தேவைக்குத் தகுந்தமாதிரி பக்கங்களை முன்னே பின்னே கூட திருப்பிப் பார்த்துக்கொள்ளலாம்

புத்தகத்திலே செய்வது மாதிரியே, அதுவரைக்கும் படித்த பக்கம் ஞாபகத்திலே இருப்பதற்காக பக்கத்தின் ஒரு மூலையை மடித்து வைக்க வேண்டுமா வைத்துக்கொள்ளலாம். அதற்கென ஒரு பொத்தான் இருக்கு அதை அழுத்தினால் திரையிலே தெரிகிற பக்கத்தின் மூலையை மடக்கி வைத்துக்கொள்ளலாம். அல்லது ஒரு எலெக்ட்ரோனிக் கிளிப்பைச் செருகி "புக்மார்க்"மாதிரி உபயோகப்படுத்திக்கலாம்.

புத்தகத்திலே அடிக்குறிப்பு ஏதாவது போட்டிருக்கிறது என்றால் அதை அந்த பக்கத்திலேயே வரவழைத்துப் பார்த்துக்கலாம். படித்துப்படித்து கண்கள் களைப்படைந்து போகிறதா? எழுத்துக்களை பெரிசு படுத்திக் கொள்ளலாம். வீட்டிலே விளக்கு அணைத்து விட்டால் கூட பக்கத்திலே தூங்கிறவங்களுக்குத் தொந்தரவில்லாமல் நாம் கதை படிக்கலாம்! ஒரு நாவலிலே நாற்பதாவது பக்கம் படித்துக் கொண்டிருக்கிறோம். அதிலே வருகின்ற ஒரு கதாபாத்திரம். நாலாவது பக்கத்திலே என்னமோ சொல்லியதே அது என்ன என்கின்ற சந்தேகம் வருதா? உடனே அந்தப் பக்கத்திலே உள்ள குறிப்பை வரவழைச்சிப் பார்த்துக் கொள்ளலாம்.

ஒரு குறிப்பிட்ட வார்த்தை இந்த நாவலிலே எத்தனை தடவை வந்திருக்கிறது என நொடியிலே கண்டு பிடித்துவிடலாம். படிக்கிறதற்குப் அலுப்பாக இருக்கின்றதா?ஹெட்போனை எடுத்து மாட்டிக் கொள்ளலாம். காதிலே அது கதை சொல்ல ஆரம்பித்துவிடும். கதையோடு சேர்ந்து அவ்வப்போது படங்களும் பார்க்கலாம். சினிமா மாதிரி காட்சிகளும் இதிலே ஓடும்.

இப்போதெல்லாம் நடந்துகொண்டே, காதிலே மாட்டிக்கொண்டே, பாட்டு கேட்டுக்கொண்டு போகும் வாக்மேன்? மாதிரி இதற்கு "புக்மேன்" என்று பெயர் கொடுத்திருக்கின்றார்களாம்


எல்லாம் சரி! இயந்திரம் வளருகின்ற அளவுக்கு சிந்தனைகள் வளரனுமே அப்பத்தானே நல்ல புத்தகங்கள் எல்லாம் வரமுடியும்! அது எப்படி வரும் ? நான் சொல்லிக் கொண்டு வந்த இவ்வளவு விபரத்தையும் எதிரிலே இருந்த எழுத்தாளர் கேட்டுக்கொண்டே வந்தார். ரொம்ப சந்தோஷம் சார்!என்றார் . அப்புறம் ஒரு சந்தோஷமான விடயம் சார்! என்றார்என்ன?" என்று கேட்டேன்.இந்த வருடம் சிறந்த இலக்கிய சேவை செய்ததற்காக "இலக்கியவிருது" எனக்குக்குத்தான் சார் கொடுத்திருக்கின்றார்கள் என்றார் ரொம்ப அடக்கமாக! அப்படியா! சொல்லவே இல்லையே! அது சரி இந்த வருஷம் புதுசா புத்தகம் எதுவும் நீங்க எழுதவில்லைபோல இருக்கே?" என்றேன்.

ஆமாம் சார்! நான் எதுவும் எழுதவில்லை அப்படி எழுதாமல் இருந்ததே இலக்கியத்திற்கு நான் செய்த பெரிய சேவையாகக் கருதி இந்த விருது வழங்குவதாக அதை என்கையிலே கொடுக்கும் போது சொன்னார்கள் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்திற்கு பதிலடி இந்தியா கொடுக்கும்

## இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர்



(டில்லி)

பயங்கரவாதத்தை ஆதரிக்கும் மோசமான அண்டை நாடுகளிடம் இருந்து தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள இந்தியாவுக்கு முழு உரிமையும் உள்ளது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார்.

சென்னை இந்திய தொழில் நுட்பக் கழகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போதே இதனைக் கூறிய அவர், பாகிஸ்தானையும் கடுமையாக விமர்சித்தார்.

இந்தியா தனது பாதுகாப்பு மற்றும் தேசிய நலன்களைப் பாதுகாக்கும் உரிமையைப் பயன்படுத்தும் என்றும், பயங்கரவாதத்திற்கு எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்பது குறித்த வெளிப்புற பரிந்துரைகளை ஏற்காது என்றும் அவர் கூறினார்.

அத்துடன், பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் எதிர்வினையை புதுடில்லி மட்டுமே தீர்மானிக்கும் என்றும் வெளியுறவு அமைச்சர் அடிக்கோடிட்டுக் காட்டினார். (3)

# ரஷ்யாவின் புத்தாண்டு கொண்டாட்டத்தை குறிவைத்து தாக்கிய உக்ரைன்

- ✵ 24 பேர் உயிரிழப்பு
- ✵ 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயம்



(மொஸ்கோ)

புத்தாண்டுக் கொண்டாட்ட நிகழ்வு களை இலக்கு வைத்து, உக்ரைன் நேற்று முன்தினம் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளதாக ரஷ்யா குற்றம் சுமத்தியுள்ளது. இந்தத் தாக்குதலில் 24 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக ரஷ்யா கூறுகிறது.

ரஷ்யாவின் கெர்சான் பிராந்தியத்தில் உள்ள விடுதியொன்றில் நேற்று முன் தினம் புத்தாண்டை முன்னிட்டு பெருமளவிலான மக்கள் கூடியிருந்தனர். இந்நிலையில், அவர்களை இலக்கு வைத்து உக் ரைன் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளதாக ரஷ்யா குற்றம் சுமத்தியுள்ளது.

அத்துடன் இந்தத் தாக்குதலின் போது ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பில் தமது அதிகாரிகள் ஆய்வு செய்து வருவதாகவும் ரஷ்யா குறிப்பிட்டுள்ளது. இதனிடையே உக்ரைன் அனுப்பிய 168 ஆளில்லா விமானங்களை, தாம் தாக்கி அழித்ததாகவும் ரஷ்யா அறிவித்துள்ளது. (3)

# ஆப்கானிஸ்தானில் வெள்ளப்பெருக்கு

- ✵ 17 பேர் உயிரிழப்பு
- ✵ 1000 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதம்



(காபூல்)


ஆப்கானிஸ்தானில் கடந்த சில நாட்களாக, பனிப்பொழிவுக்கு இடையே கனமழை பெய்து வருகிறது. கபிசா, பர்வான், டாய்கண்டி, உருஸ்கான், கந்தஹார், ஹெல்மண்ட், பாட்கிஸ், பர்யாப், படக்ஷான், ஹெராத் உள்ளிட்ட மாகாணங்களில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. இதனால், அங்கு மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது.

ஒரு வீட்டின் கூரை இடிந்து விழுந்ததில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் உயிரிழந்தனர். கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கியும், மின்சாரம் தாக்கியும் இதுவரை 17 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 11 பேர் படுகாயமடைந்துள்ளனர். ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன. வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில், அந்நாட்டு தேசிய பேரிடர் மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

கனமழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 1,200 கால்நடைகள் உயிரிழந்ததாக ஆப்கான் தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனம் தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் சேதமதிப்பை அளவிட மதிப்பீட்டு குழுவினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# தாய்வான் சீனாவுடன் இணைவதை யாராலும் தடுக்க முடியாது

## சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உறுதி



(பீஜிங்)

**தாய்வானை சீனாவுடன் இணைப்பது தடுத்து நிறுத்த முடியாத வரலாற்று செயல்முறை என்று சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.**

சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்த தாய்வான் 1949 இல் தனி நாடாகப் பிரிந்தது. ஆனால் தாய்வானை இன்னும் தனது நாட்டின் ஒரு பகுதியாகவே சீனா கருதி வருகிறது. எனவே அதனை மீண்டும் தன்னுடன் இணைப்பதற்காக சீனா போர்ப்பயிற்சிகளை நடத்தி வருகிறது. இதனால் அப்பகுதியில் சீனா பதற்றத்தைத் தூண்டுகின்றது.

தாய்வானுடன் வேறு எந்த நாடுகளும் தூதரக உறவு வைத்துக் கொள்ளக் கூடாது எனவும் சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும், தாய்வான் எல்லைக்குள் போர்க்கப்பல் மற்றும் விமானங்களை அனுப்பி பதற்றத்தையும் தூண்டுகிறது. கடந்த வாரம் சீனா, தாய்வான் எல்லையைச் சுற்றிலும் கூட்டு இராணுவ பயிற்சியை நடத்தியது.

இந்நிலையில், புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் நாட்டு மக்களிடம் உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

தாய்வானைத் தனது நாட்டின் தன்னாட்சி பிராந்தியமாகவே சீனா கருதுகிறது. தற்போது அதனை மீண்டும் சீனாவுடன் இணைக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். எனவே தாய்வான் விரைவில் சீனாவுடன் இணைவதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது என தெரிவித்தார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதுவருடப் பிறப்பை முன்னிட்டு ஆலயங்களில் இடம்பெற்ற விசேட வழிபாடுகள். **படங்கள் - சிவசாந்தன், ஜோசப்நயன், வசந்தரூபன்**

## 2026ஆம் ஆண்டின் அரச சேவைகள் சத்தியப் பிரமாணத்துடன் ஆரம்பம்



(முல்லைத்தீவு)

2026ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மாவட்ட அரசாங்க அதிபரால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்ட பின்னர், தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

தொடர்ந்து நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காகவும் பல்வேறு அனர்த்தங்களில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூர்ந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, உத்தியோகத்தர்கள் அனைவரும் உறுதி மொழியை எடுத்துக்கொண்டனர். (8)



(பச்சிலைப்பள்ளி)

2026ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பிரதேச செயலாளரால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்ட பின்னர், தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

தொடர்ந்து நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காகவும் பல்வேறு அனர்த்தங்களில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூர்ந்தும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, உத்தியோகத்தர்கள் அனைவரும் உறுதி மொழியை எடுத்துக்கொண்டனர். (8)



(மன்னார்)

2026ஆம் ஆண்டிற்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

"தூய்மையான சிந்தனை வளமான நாடு" என்னும் உயரிய சிந்தனை அடங்கிய வாழ்த்து செய்திகளுடன் மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் அலுவலர்களுக்கு கைவிசேஷம் வழங்கி ஆண்டின் முதல் நாளை மகிழ்வாக ஆரம்பித்து வைத்தார். (8)



மத்தியஸ்தர் சபை ஆணைக்குழு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடுகள் அமைச்சினால் கோப்பாய் மத்தியஸ்த சபை பிரதேச குழாத்தினராக நியமனம் பெற்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட மத்தியஸ்தர் பயிற்சி உத்தியோகத்தர் பி.சனாதனன், பிரதேச செயலர் ஈ.தயாரூபன், உதவி பிரதேச செயலர் ச.அபர்ணா, மத்தியஸ்தர் சபை உத்தியோகத்தர் தெ.முகுந்தன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.



**DEO GLOBAL** குழுமத்தின் வருடாந்த விருது வழங்கும் விழா கடந்த 27ஆம் திகதி கொழும்பில் உள்ள கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் டியோ சிலோன் DEO CEYLON அழகு சாதனப் பொருட்கள், டியோ ஏர் ஏர் - கண்டிஷனிங் DEO AIR AC UNITS தீர்வுகள், ஃபயர்வே FIREWAY தீ பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்ட பல முக்கிய தயாரிப்புகள் அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டதுடன் கடந்த ஆண்டில் சிறப்பாக செயற்பட்ட ஊழியர்களுக்கு விருதுகளையும் வழங்கியது.

## முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனின் 18ஆவது ஆண்டு நினைவேந்தல்



முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தியாகராசா மகேஸ்வரனின் 18ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டுக்கோட்டை அலுவலகத்தில் நடைபெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி அமைப்பாளரும், வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உறுப்பினருமான விஜிமருகன் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் மங்கள சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டு அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன. இறுதியாக, மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (8-104)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருவாசக முற்றோதல்

(வவுனியா)


வவுனியா பண்டாரிக்குளம் (குளக்கட்டு) சித்திவிநாயகர் ஆலயத்தில் இன்று சனிக் கிழமை காலை 9 மணியிலிருந்து திருவாசக முற்றோதல் நிக ழ்வு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறியத் தருகின்றார்கள். (8)

# இசை ஆராதனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். கிளை - காரைநகர், கிழவன் காடு கலாமன்றம் நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 179 ஆவது இசை ஆராதனை விழா எதிர்வரும் 7 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்கு காரை நகர், கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. (3)

# நெடுந்தீவு பிரதேச செயலகத்திற்கு உதவிப் பிரதேச செயலாளர் நியமனம்



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச செய லகத்திற்கு புதிய உதவிப்பிரதேச செயலாளராக சிவதுரை றஜிந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்றைய தினம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனிடம் தனக் கான நியமனக் கடிதத்தினைப் பெற்றுக்கொண்டார்.

இந்நிலையில் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை நெடுந்தீவு பிரதேச செயலகத் தில் அவர் தமது கடமையினை பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (8-33)

# இருபாலை கமக்காரர்கள் அமைப்பின் அங்கத்தவர்கள் பதிவு மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

இருபாலை தெற்கு கமக்காரர்கள் அமைப்பின் அங்கத்தவர்கள் பதிவை மீளாய்வு செய்யும் பணிகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை இருபாலை தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இதில் கமக்காரர்கள் அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரும் தமது பதிவை உறுதி செய்யும்படி செய லாளர் நடேசபிள்ளை கஜேந்திர குமார் தெரிவித்துள்ளார். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 800 | 800 | 750 | 800 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 1400 | 1200 | 1500 | 1400 |
| தக்காளி | 600 | 550 | 700 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 250 | 150 |
| கோவா | 300 | 300 | 350 | 400 |
| கரட் | 350 | 450 | 400 | 400 |
| பூசணி | 140 | 140 | 120 | 150 |
| புடோல் | 400 | 400 | 400 | 300 |
| வாழைக்காய் | 100 | 120 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 250-300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 200 | 240 |
| பாகற்காய் | 800 | 900 | 1000 | 1200 |
| வெண்டக்காய் | 400 | 300 | 350 | 700 |
| கருணைக் கிழங்கு | 350 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 800 | 700 | 600 | 800 |
| லீக்ஸ் | 400 | 450 | 450 | 600 |
| பீற்றூட் | 800 | 600 | 800 | 800 |
| கறிமிளகாய் | 1200 | 1100 | 1500 | 1600 |
| முருங்கைக்காய் | 1800 | -- | 2000 | -- |
| போஞ்சி | 600 | 700 | 800 | 800 |
| கத்தரிதம்புள்ள | 700 | 650 | 600 | 600 |
| கீரை – 1 பிடி | 350 | 80-160 | 200 | 200 |
| தேசிக்காய் | 600 | 600 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 200 | 150 | 120-160 |
| இராசவள்ளி | 600 | 800 | 450 | 500 |
| வெங்காயப்பூ | 1200 | 900 | 1000 | 800 |
| முள்ளங்கி | 200 | 260 | 300 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 150 | 100 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 150 |


# இராசிபலன்

03.01.2026
மார்கழி 19, சனிக்கிழமை
பூரணை பிற்பகல் 4.51 மணிவரை
திருவாதிரை முன்னிரவு 7.02 மணிவரை


சுப நேரம் 3.30-5.00 மணிவரை
இராகுகாலம் 9.30-11.00 மணிவரை
பூரணை விரதம், உதயம் நடேசர் ஆருத்திரா தரிசனம்

சந்திராஷ்டமம்: அனுசம், கேட்டை


வளவன்





உறவினர் வழியில் ஒத் துழைப்புக்கள் கிடை க்கும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.





எதிர்பாராத திருப்ப ங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.





தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்த வர்கள் மனம் மாறுவர், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பயண ங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும்.





உற்சாகத்தோடு பணி புரியும் நாள், வர வேண்டிய வரவுகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும்.





உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், அலங்காரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




செவி குளிரும் செய்தி கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.




மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்க ளைக் காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.




பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட் டுவீர்கள், உறவினர் வழி யில் மனதிற்கினிய சம்ப வங்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.




குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்ப டுவீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், மனதில் ஆறுதல் தரும் வகை யில் பயணமொன்று இடம்பெறலாம்.




அன்பு நண்பர்கள் ஆர் வத்தோடு உதவ முன் வருவர், கொள்கைப் பிடிப்போடு செயற்படு வீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், கனவுப் பலிதமுண்டு.




குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமை யான அனுபவங்கள் ஏற்படலாம், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.





எதிர்பார்ப்புக்கள் நிறை வேறி ஏற்றம் பெறு வீர்கள், உறவினர் வழி யில் ஏற்பட்ட முரண் பாடுகள் அகலும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

கர்வம் முட்டாள்களை விட்டு நீங்காத துர்க்குணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் - 2026



**புகழ்ச்சியை விரும்பும் சிம்ம இராசியினரே! புகழ்ச்சியால் மகிழ்ச்சி அடையும் சிம்ம இராசியினருக்கு 2026 ஆம் ஆண்டு நல்லவிதமான ஆண்டாக அமைய நல்வாழ்த்துக்கள்.**

லாபஸ்தானத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் காலம் வரை பொருளாதாரத்தில் நல்ல வளர்ச்சி இருக்கும். தாராள தன வரவு உண்டு. வீட்டில் சுப விசேடங்கள் நடக்கும். புதிய வாய்ப்புகள் கை கூடும். உங்களை சாதாரணமாக நினைத்தவர்கள் உங்களது திறமைகளை உணர்வார்கள். சவாலான செயல்களைக் கூட நேர்த்தியாக செய்து முடித்து வெற்றி வாகை சூடுவீர்கள். பட்டம், பதவி போன்ற அதிகார அதிஷ்ட வாய்ப்புகள் கைகொடுக்கும்.

### குருவின் சஞ்சார பலன்கள்

சிம்ம இராசிக்கு 5,8ஆம் அதிபதியான குரு பகவான் ஜூன் 2, 2026 வரை 11ஆம் இடமான லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பார். அதன் பிறகு 12ஆம் இடமான விரய ஸ்தானத்திற்கு செல்கிறார். அஷ்டமச் சனியின் தாக்கத்தால் பிரிந்து வாழ்ந்த தம்பதிகளுக்கு சேர்ந்து வாழும் விருப்பம் அதிகரிக்கும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். எதிர்பார்த்ததை விட அதிக வருமானம் கிடைக்கும். வீடு, மனை வாங்கி மகிழ்வீர்கள். பூர்வீகச் சொத்துக்கள் உங்கள் கைக்கு வந்து சேரும். கர்ப்பிணி பெண்களுக்கு ஆண் மகவு பிறக்கும். வியாபாரிகளுக்கு விற்பனை அதிகரிக்கும். நிலுவையில் உள்ள சம்பள பாக்கிகள் வந்து சேரும். பெண்களுக்கு வேலை பார்க்கும் இடத்தில் இணக்கமான சூழ்நிலை உண்டாகும். பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேரும் வாய்ப்பு கிடைக்கும்.

தீர்க்கமாக யோசிக்காமல் எடுக்கும் முடிவு எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும். விவசாயிகள் பயிர் காப்பீடு செய்வது அவசியம். சட்டச் சிக்கல் காரணமாக மன அமைதி குறையும் என்பதால் எந்த விதமான சட்டச் சிக்கலாக இருந்தாலும் நீதிமன்றப் படி ஏறுவதை தவிர்த்து பேசித் தீர்க்க முயல வேண்டும். எளிதில் முடிய வேண்டிய காரியங்கள் மனச் சஞ்சலத்தால் தாமதமாகும். யாருக்கும் பணம் கடனாக தர, வாங்கக் கூடாது.

### சனியின் சஞ்சார பலன்கள்

சிம்ம இராசிக்கு 6,7ஆம் அதிபதியான சனி பகவான் 2026ஆம் ஆண்டு முழுவதும் அஷ்டம ஸ்தானத்தில் நின்று அஷ்டமச் சனியாக பலன் தருவார். உங்களைச் சுற்றி இருப்பவர்களில் உண்மையாக இருப்பவர்கள் யார்? பகடைக்காயாக பயன்படுத்துபவர் யார்? என்ற அனுபவ உண்மை புரியும். உடல் உபாதைகள், நோய் தொந்தரவு மாற்று வைத்தியத்தில் பலன் தரும். கொடுக்கல் வாங்கலில் நிதானத்தை

## பொருளாதாரத்தில் நல்ல வளர்ச்சி இருக்கும்

கடைபிடிக்கவும். தாய் வழியில் மனக்கவலை, கருத்து வேறுபாடு உண்டாகும். புதிய முயற்சிகளைச் சுய ஜாதக பரிசீலனைக்கு ஏற்ப செய்வது நல்லது. பணவரவில் முன்னேற்றம் இருக்கும். பெண்கள் புதிய வாகனம் வாங்குதல், ஆடம்பரப் பொருட்கள் வாங்குதல், உல்லாசப் பயணம் செல்லுதல் என்று இனிமையாகப் பொழுதை கழிப்பார்கள். சிலர் பணிச்சுமை அல்லது ஆரோக்கிய குறைபாடு காரணமாக விருப்ப ஓய்வு பெறலாம். தம்பதிகள் அமைதி கடைபிடித்தால் நிலைமை சீராகும்.

குடும்பத்தில் இருப்பவர்களது செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டும்படியாக இருந்தாலும் நிதானத்தை கடைபிடிப்பது வீண் பிரச்சினைகளைத் தடுக்கும். பழைய வீட்டைப் புதுப்பிப்பீர்கள். பொழுது போக்கான விருந்து விழாக்களில் கலந்து கொள்வீர்கள். பிள்ளைகளின் திருமணம், கல்வி போன்ற சுப நிகழ்விற்கு எதிர்பார்த்திருந்த தொகை கிடைத்து பணவரவு சரளமாகும். உங்கள் பேச்சால், முன் கோபத்தால் நல்ல வாய்ப்புகள் தள்ளிப்போகும். பணியாளர்களால் சில அசௌகரியங்கள் ஏற்படலாம்.

### ராகு கேதுவின் சஞ்சார பலன்கள்

2026 ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி வரை கேது பகவான் இராசியிலும் ராகு பகவான் சம சப்தம ஸ்தானத்திலும் சஞ்சரிக்கிறார்கள். இது அஷ்டம சனி பிரச்சினை, ஜென்ம கேது, ராகுவின் காலம் என்பதால் எதையும் எடுத்தோம், கவிழ்த்தோம் என்று செய்யக் கூடாது. வாழ்க்கை என்பது கண்ணாடி பாத்திரம் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். எந்த கிரகம் உங்களுக்கு சாதகமாக இருந்தாலும் திருமண முயற்சியை தவிர்ப்பது நல்லது. விருப்ப விவாகமோ பெற்றோர்களின் ஆசிர்வாத திருமணமாக இருந்தாலும் ஏழில் ராகு இருப்பதால் சில தவறான வாழ்க்கைத் துணையை தேர்வு செய்து பின் நாட்களில் வருந்தலாம் என்பதால் திருமணத்தை [illegible] சிறந்தது. பெண்களுக்கு வேலை பார்க்கும் இடத்தில் சில சங்கடங்கள் உண்டாகலாம். அதனால் பார்க்கும் வேலையை மாற்றலாம். பெண்கள் இந்த காலக் கட்டத்தில் மாங்கல்ய சரடு மாற்றுவது, தாலி பெருக்கிப் போடுவது போன்றவற்றை தவிர்க்கலாம். கையில் காசு சரளமாக புரளும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். விற்காமல் தேங்கிய சரக்குகள், கையிருப்பில் இருக்கும் பொருட்கள் அதிக விலைக்கு விற்பனையாகும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். உத்தியோகஸ்த்தர்கள் வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்து மேல் அதிகாரிகளின் சொல்படி நடப்பது முன்னேற்றத்துக்கு உத




வும்.

### மகம்

மாற்றமும் ஏற்றமும் தேடி வரும் வருடம். பூமி, மனை, வாகனம் வாங்குவதில் ஆர்வம் அதிகரிக்கும்.

ஆவணங்கள் தொடர்பான பிரச்சினைகள் முடிவிற்கு வரும். காணாமல் போன நகை, பணம் கிடைக்கும். கடந்த கால கடன் பிரச்சினைகள் குறையத் தொடங்கும். போதிய தன வரவால் குடும்பத்தில் நிம்மதி நீடிக்கும். சொத்தை அடமானம் வைத்து சில்லறைக் கடனை அடைத்து கடன் தொல்லையில் இருந்து இடைக்கால நிவாரணம் பெறுவீர்கள். தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்ற பழமொழிக்கு ஏற்ப சிலரின் இளைய சகோதரம் உதவிக்கரம் நீட்டுவார்கள். சிலருக்கு சளி, இருமல், காய்ச்சல், உடல் அசதி போன்ற சிறு சிறு உடல் உபாதைகள் உண்டாகும். அஷ்டம சனி மற்றும் விரய குரு காலம் என்பதால் அதிக முதலீடு கொண்ட செயல்களைத் தவிர்ப்பது நல்லது. கிடைக்கும் உபரி பணத்தை வேறு வகையில் முதலீடு செய்வது நல்லது. சிலர் பதிவுத் திருமணம் செய்து உற்றார் உறவினரை சங்கடப்படுத்துவர். தொழில் பங்குதாரரின் மேல் நம்பிக்கை குறைவு உண்டாகும். வெளிநாட்டு வேலை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும். தினமும் சிவ கவசம் படிக்கவும்.

### பூரம்

நிதானத்துடன் செயல்பட வேண்டிய வருடம். வரவுக்கு மீறிய செலவுகள் மனதை வருத்தும். அடுத்தவருக்கு ஜாமீன் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. தொழில், உத்தியோக ரீதியான பாதிப்பு எதுவும் இருக்காது. பங்குதாரர்களிடம் இருந்து வந்த பிரச்சினைகள் அகலும். மேல் அதிகாரிகளிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. நல்ல சொந்த வீட்டிற்குச் செல்வீர்கள். கை மறதியாக வைத்த முக்கியமான ஆவணங்கள், நகைகள் கிடைக்கும். இடப் பெயர்ச்சி செய்ய நேரும். வீடு மாற்றம், ஊர் மாற்றம், வேலை மாற்றம் ஏற்படலாம். குழந்தை பாக்கியத்திற்கு ஏங்கியவர்களுக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். வீடு, வாகன, சொத்து யோகம் உண்டாகும். தாயின் உடல் நிலையில் நல்ல மாற்றம் ஏற்படும். நண்பர்களின் ஒத்துழைப்பு மகிழ்ச்சியை அதிகரிக்கும். பெண்களின் ஒன்லைனில் பொருள் வாங்கும் மோகம் வங்கி சேமிப்பை கரைத்து விடும். வீண் விரயம் அல்லது வைத்தியச் செலவு சற்று மிகைப்படுத்தலாக இருக்கும். வருமானத்தில் பெரும் பகுதி கடனுக்கு செல்லும். வியாழக் கிழமை குரு பகவானை வழிபடவும்.

### உத்திரம் 1

மேன்மையான பலன்கள் உண்டாகும் வருடம். சொந்தத் தொழில் செய்பவர்கள் அதிக முனைப்புடன் விடா முயற்சியுடன் செயல்பட்டால் பெரும் லாபம் கிட்டும். மாற்றுமுறை வைத்தியத்தில் ஆர்வம் அதிகரிக்கும். வேலைக்கு செல்லும் இடத்தில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். குடும்பத்திற்கு பொன், பொருள் வாங்குவீர்கள். எதிர்காலம் குறித்த சிந்தனை அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் ஆரோக்கிய குறைபாடு அகலும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். வேலைக்காக விண்ணப்பித்தவர்களுக்கு சாதகமான பதில் கிடைக்கும். சிலருக்கு தாய்வழிச் சொத்தில் தாய்மாமனுடன் எல்லைத் தகராறு உண்டாகும். மத்தியஸ்தர்கள் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடக்கும்.

விவாகரத்து வரைச் சென்ற வழக்குகள் சுமூகமாகும். சிலருக்கு எண்ணங்களை செயலாக மாற்ற முடியாது. மனதில் இனம் புரியாத பய உணர்ச்சி இருந்து கொண்டே இருக்கும். சொத்துக்களுக்கு நல்ல வாடகைதாரர் கிடைப்பார்கள். அரசு வழி ஆதாயம் உண்டு. தந்தையின் கட்டளைக்கு இணங்குவீர்கள். குழந்தை பாக்கியம் தொடர்பான உங்களின் எண்ணம் ஈடேறும். குல தெய்வ வழிபாடு நற்பலன் தரும். தினமும் சிவபுராணம் படிக்கவும்.

**பரிகாரம்:** மாதம் ஒருமுறை உங்கள் ஜென்ம நட்சத்திர நாளில் சிவனை வழிபாட்டால் நவகிரக தோஷம் விலகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்று நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் நம் வாழ்க்கைத் தோட்டத்தில் விதைக்கப்படும் விதைகள். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சைவசமயத்தை நிந்தித்து தமிழுக்கு வஞ்சம் செய்யாதீர்

தமிழ் பக்தி மொழி எனும் பெருமைக்குரியது. நாயன்மார்கள் அருளிய திருமுறைகளும் ஆழ்வார்கள் ஈந்த திவ்ய பிரபந்தங்களும் தமிழின் உயிர்ப்பு எனலாம்.

இதையும் கடந்து இராமாயணம், மகாபாரதம் எனும் இதிகாசங்களும் சிலப்பதிகாரம் உள்ளிட்ட ஐம்பெரும் காப்பியங்களும் தமிழின் ஆணிவேர் எனலாம்.

இதற்கும் மேலாக, திருக்குறள் எனும் பொய்யா மொழியாலும் தமிழ் பக்தி மொழி எனப் போற்றப்படலாயிற்று.

ஆக, செம்மொழியாகிய நம் தமிழ்மொழி மனித மொழிகளில் காலத்தால் முந்தையது. தவிர இவ்வுலகின் கண் உள்ள மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாக விளங்குவதும் தமிழ்மொழியேயாம்.

அதனாலன்றோ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தான் பயணம் செய்கின்ற நாடுகளிளெல்லாம்; நம் இந்திய தேசத்தில் காலத்தால் முந்திய தமிழ்மொழி பேசுமொழியாகவும் எழுத்துமொழியாகவும் இருப்பது எமது நாட்டுக்குப் பெருமை எனப் புகழ்ந்துரைத்து வருகிறார்.

இத்தகைய பெருமைக்குரிய தமிழ்மொழி வாழ வேண்டுமாயின், திருமுறைகளும் பிரபந்தங்களும் புராண இதிகாசங்களும் காப்பியங்களும் உயிர்வாழ வேண்டும்.

ஆம், தமிழ்மொழியின் மூலவேராக - ஆணிவேராக இருக்கக்கூடிய பக்தி இலக்கியங்கள் சைவ சமயத்தினூடு உயிர்வாழ்கின்றன.

ஆக, சைவ சமயத்துக்கு தீங்கு விளைவிக்கப்படுமாக இருந்தால் அதன் விளைவு தமிழ் மொழிக்கான பாதிப்பாக அமையும்.

உண்மையில் சிவபூமி எனப் போற்றப்பட்ட எங்கள் ஈழத் திருநாடு குடியேற்றவாதத்துக்கு ஆளாகியதன் காரணமாக கிறிஸ்தவமும் நம் மண்ணில் பரவலாயிற்று. எனினும் அது குறித்து சைவ மக்கள் ஒருபோதும் வெகுண்டதில்லை.

அதற்குச் சான்று யாது என யாரேனும் கேட்டால், நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரே புனித விவிலியத்தை தமிழில் தந்தார் எனப் பதிலளிக்கலாம்.

அதேபோன்று நம் கிறிஸ்தவ மக்களும் தங்களின் தாய்ச்சமயமாகிய சைவ சமயத்தை நிந்திக்க மனத்தாலும் நினைக்கவில்லை.

இந்த உயரிய தெய்வீகம் தமிழ் மக்களிடம் இருந்தமையால் நாம் அனைவரும் தமிழராய் வாழ்கிறோம்.

எனினும் தற்போது சில கிறிஸ்தவ மத குருமார் சைவ சமயத்துக்கு எதிராகச் செயற்பட்டு தமிழ் மக்களிடையே முரண்பாட்டை ஏற்படுத்த கடும் பிரயத்தனம் செய்கின்றனர்.

அதிலும் மன்னார் மாவட்டத்திலிருந்து இந்த சதிமுயற்சிகள் முடுக்கி விடப்படுவதான தகவல்கள் வெளியாகியுள்ளன.

யார் என்ன செய்தாலும் அதுகண்டு எங்கள் சைவ - கத்தோலிக்க மக்கள் சலனமடைய மாட்டார்கள். அவர்கள் தமிழால் ஒற்றுமைப்பட்டவர்கள்.

சைவம் தமிழின் தாய்ச்சமயம் என்பதை ஒருபோதும் அவர்கள் மறக்கவில்லை.

அதனாலேயே தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளார் திருவாசகத்தின் பெருமையையும் தவஞானி மரியசேவியர் அடிகளார் கொடிக்கவியையும் பாடிப் பரவித் தமிழ் வளர்த்தனர்.

இவ்வுண்மையை தயவுசெய்து யாரும் மறந்து விடாதீர்கள் - தமிழுக்கு வஞ்சம் செய்து விடாதீர்கள்.

# அநுர அரசாங்கத்துக்கு எதிராக பலமான கூட்டணிக்குத் தயார்

## பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா

(கொழும்பு)
ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தற்போது மிகவும் சாதகமான மட்டத்தில் உள்ளதாகவும் சஜித் பிரேமதாசவின் தலைமையில் விரைவில் பலமான அரசியல் கூட்டணியொன்று உருவாக்கப்படும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

எதுல்கோட்டேயிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அவர்,

இரு கட்சிகளையும் ஒன்றிணைக்கும் பொறுப்பை கட்சியின் மேலாண்மைக் குழுத் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் ஒப்படைத்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆசீர்வாதத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளுடன் அண்மையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளன.

இந்த ஒன்றிணைவானது நாட்டின் வலதுசாரி அரசியல் முகாம் மீது நம்பிக்கை வைத்துள்ள மக்களுக்கு ஒரு புதிய எதிர்பார்ப்பை வழங்கும் என்றும், இந்த பலமான கூட்டணியைக் கண்டு அரசாங்கம் தற்போது அச்சமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சஜித் பிரேமதாசவின் தலைமைத்துவத்துடனும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அனுபவத்துடனும் கட்டியெழுப்பப்படும் இந்தக் கூட்டணி, நாட்டின் தீர்மானமிக்க அரசியல் சக்தியாக மாறும் எனச் சுட்டிக்காட்டிய அவர், மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தார்.

இத்தேர்தலில் அரசாங்கத்திற்கு எதிரான மாபெரும் மக்கள் சக்தியைத் திரட்டத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். (ம-7)

# சட்டத்தை தமக்கு ஏற்றாற்போல் பயன்படுத்த அரசாங்கம் முயற்சி

## நாமல் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)
சட்டத்தை தமக்கு ஏற்றாற்போல் பயன்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிதி மோசடி குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மகன் விவகாரம் தொடர்பில் நேற்று வெள்ளிக்கிழமை (02) வெலிசர நீதிமன்றத்துக்கு சென்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

சட்டத்தை தமக்கு ஏற்றாற்போல் பயன்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது.

நீதிமன்றம் மீது எமக்கு உறுதியான நம்பிக்கை உள்ளது. இரண்டரை இலட்சம் ரூபாவுக்காக ஐந்து பொலிஸ் குழுவை அமைத்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை.

அழைப்பு விடுத்தால் அவர்கள் வருவார்கள். நாங்கள் எக்காலத்திலும் பொலிஸைக் கண்டு ஓடி தலைமறைவாகவில்லை. வரச் சொன்னால் சென்று வாக்குமூலம் வழங்குவோம்.

அரச அதிகாரிகளை நெருக்கடிக்குள்ளாகும் வகையில் தான் அரசாங்கம் செயற்படுகிறது. அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகள் வெளியாகும் போது அரச அதிகாரிகள் தண்டிக்கப்படுகிறார்கள். இது முற்றிலும் தவறானது என்றார். (ம-7)

# 170 கிலோ ஹெரோயின் எரியூட்டி அழிப்பு

(கொழும்பு)
கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த சுமார் 170 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள், நேற்று வெள்ளிக்கிழமை வெற்றிகரமாக எரியூட்டி அழிக்கப்பட்டதாக பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் பொறுப்பாளர் பிரதிப் பொலிஸ்மாதிபர் அசோக தர்மசேன தெரிவித்தார்.

வழக்கு விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் 170 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்கப்பட்டது. நீதிமன்றத்திலிருந்து கொண்டு வரப்பட்ட இந்த போதைப்பொருட்கள் விசேட அதிரடிப் படையினரின் (STF) பலத்த பாதுகாப்புடன் புத்தளம், வனாதவில்லு (லெக்டோவத்த) பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் எரியூட்டி நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதோடு வெள்ளிக்கிழமை (2) மதிய வேளையில் குறித்த போதைப் பொருள் எரியூட்டியில் இடப்பட்டு முழுமையாக அழித்து முடிக்கப்பட்டது.

இந்த ஒட்டுமொத்த செயன்முறையும் சட்ட ரீதியான விதிமுறைகளுக்கு அமைவாகவும் உயர் அதிகாரிகளின் நேரடி மேற்பார்வையுடனும் இடம்பெற்று முடிந்தது. (ம-7)

# போதைப்பொருளுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் ரூ. 34.19 மில்லியன் மதிப்புள்ள குஷ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் 35 வயதுடைய இந்தியர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் பெங்கொங்கிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் UL 403 இல் மூலம் நேற்று (02) காலை நாட்டுக்கு வந்துள்ளார்.

சந்தேகநபரும் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களும் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் போதைப் பொருள் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணியகம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (ம-7)

# திருகோணமலையில் விபத்து 21 வயது இளைஞன் பலி

(திருகோணமலை)
திருகோணமலை - ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள புன்னையடி பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (01) இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த இளைஞன் ஈச்சிலம்பற்று - முத்துச்சேனைப் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய ஜமன ராஜ் ஜதுர்ஷன் எனத் தெரியவருகிறது.

அதிவேகம் காரணமாக மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாடுகளை...

அவரை வழிமறித்த கும்பல் ஒன்று கை மற்றும் பொல்லுகளால் தலை மற்றும் உடலின் பல பாகங்களில் கடுமையாகத் தாக்கியுள்ளது.

இதன்போது இளைஞர் கூச்சலிட்டதையடுத்து சத்தம் கேட்டு அயலவர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். இதனைக் கண்ட தாக்குதலாளிகள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளாகி மயக்கமுற்ற நிலையில் மீட்கப்பட்ட இளைஞர் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சையின் அவசியம் கருதி அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் சட்டவிரோதமாக மாடுகளைப் பிடித்து விற்பனை செய்யும் கும்பலைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் இந்தக் கும்பல் மாடுகளைத் திருடியபோது பாதிக்கப்பட்ட இளைஞர் அவர்களைக் கையும் களவுமாகப் பிடித்து எச்சரித்துள்ளார்.

இதன் பின்னணியிலேயே பழிவாங்கும் நோக்கோடு இந்தத் தாக்குதல் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பொலிஸார், பாதிக்கப்பட்ட இளைஞரிடம் வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். *(ம-7)*

## தனியார்...

நாகதீப விகாராதிபதி தலைமையிலான பௌத்த பிக்குகள் அடங்கிய குழுவினர் நேற்று வெள்ளிக்கிழமை தையிட்டி விகாரை அமைந்துள்ள பகுதிக்கு நேரில் சென்று தையிட்டி விகாரைக்காக காணிகளை இழந்தவர்களைச் சந்தித்து கலந்துரையாடியதுடன் திஸ்ஸ விகாரை முன்னர் இருந்த இடத்தினையும் திஸ்ஸ விகாரைக்குச் சொந்தமான காணிகளையும் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தையிட்டி திஸ்ஸ விகாரை இப்போது அமைந்துள்ள பகுதி தனியாருக்கு சொந்தமான காணிகள். திஸ்ஸ விகாரைக்கு என சொந்தமாக காணிகள் இருக்கும் போது இராணுவத்தினருடன் இணைந்து தனியார் காணிகளை அபகரித்து விகாரையை கட்டியுள்ளனர். இது மகா தவறு, பௌத்த பிக்குகள் அவ்வாறு செய்திருக்கக்கூடாது. மற்றவர்களுக்கு போதனை செய்யும் நாங்கள் பிறர் பொருட்களை எடுக்கக் கூடாது என புத்தரே சொல்லி இருக்கிறார்.

தற்போது விகாரைக்காக கையகப்படுத்தியுள்ள காணிகளை நான்கு கட்டமாக விடுவிப்பதாகக் கூறி இருப்பதும் ஏமாற்று வேலையே. நான்கு கட்டம் எனக் கூறுவார்கள். பிறகு ஒவ்வொரு கட்டத்திற்கு இடையில் நான்கு ஐந்து வருடங்களுக்கு மேலாகும். எனவே விடுவிப்பதனை ஒரு தடவையில் தர வேண்டும் என கோரி பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த மக்களின் போராட்டம் நியாயமானது. இதனால் தான் இந்த காணிகளை விடுவிக்க வேண்டும் என நான் குரல் கொடுத்தேன். அதன் பிறகு யாழ்ப்பாண நாக விகாரை விகாரதிபதியும் எனது கருத்தோடு ஒத்த கருத்தை தெரிவித்தார். அதனை தொடர்ந்தே தையிட்டி விகாரதிபதியும் ஊடக சந்திப்பினை மேற்கொண்டு புதிய கட்டுமானங்களை கட்ட மாட்டேன் என்றும் கூறியுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளிடமும் நான் கேட்டுக்கொள்வது, காணியை இழந்த இந்த மக்களின் போராட்டத்திற்கு எதிராக வழக்குகள் போடுவதனை நிறுத்த வேண்டும். இந்த மக்கள் தமது காணிகளை இழந்து வீதிகளில் நின்று போராடுகிறார்கள். அவர்களுக்கு காணிகளை கையளித்தால் அவர்கள் போராட மாட்டார்கள். எனவே பொலிஸார் போராட்டங்களுக்குத் தடை செய்யாது போராடுபவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

மேலும், தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத திஸ்ஸ விஹாரைக்குரிய காணிப்பரப்பை நயினாதீவு - நாக விஹாரைக்கு கையளித்தால் தையிட்டியில் ஏற்கனவே உள்ள சட்டரீதியான திஸ்ஸ விஹாரைக்குரிய காணியைப் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு வழங்க முடியும்.

இதன்படி சட்டவிரோதமாக தனியார் காணியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விஹாரையின் காணிப்பரப்பு நயினாதீவு - நாக விஹாரைக்கு பொறுப்பளிக்கப்பட வேண்டும்.

இதனையடுத்து சட்டவிரோத திஸ்ஸ விஹாரை அமைந்திருக்கக் கூடிய காணியின் அளவுக்குச் சமமான காணியை நயினாதீவு - நாக விஹாரைக்குச் சொந்தமான தையிட்டியில் அமைந்துள்ள சட்டரீதியான திஸ்ஸ விஹாரையின் காணியிலிருந்து பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு வழங்க முடியும் என்றும் விஹாராதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, விஹாராதிபதியின் கருத்தை சட்டவிரோத திஸ்ஸ விஹாரை அமைப்பு காரணமாக காணிகளை இழந்த காணி உரிமையாளர்கள் ஏற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. *(ம-7,33,104)*


**அழகுக்கலை நிபுணர் தேவை**

யாழ். நகரில் அழகுக்கலை நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். Pedicure அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

(1883)

**077 258 5564**


## மரண அறிவித்தல்

தோற்றம் 15 - 08 - 1946



மறைவு 01 - 01 - 2026

### திருமதி நல்லையா சரஸ்வதி

புலோலி வடமேற்கு மாலாவத்தையை உறைவிடமாகக் கொண்ட நல்லையா சரஸ்வதி அவர்கள் கடந்த 01.01. 2026 புத்தாண்டு தினத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தெய்வானைப் பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான நாகப்பர் - நாகம்மா தம்பதயினரின் மருமகளும், காலஞ்சென்ற நாகப்பர் நல்லையாவின் அன்பு மனைவியும் சரத்சந்திரன், ரவிச்சந்திரன், பாலகௌரி, பாலநந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் புஷ்பராணி, சிவகுமாரி, குலேந்திரன், சிவனேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் இராஜேஸ்வரி, நல்லம்மா காலஞ்சென்றவர்களான செல்வராசா, மகேந்திரராசா மற்றும் யோகேஸ்வரன், சிவனேஸ்வரன், கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் சகோதரியும் பிரகவி, சௌமியா, ஆரகன், சாகியா, கம்சவி, கர்ஷினி காலஞ்சென்ற நிசாகரி மற்றும் அம்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை எதிர்வரும் 06.01 .2026 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


மாலாவத்தை,
புலோலி வடமேற்கு,
புலோலி.

தகவல் :
குடும்பத்தினர்
077 310 7296

(C-4734)

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 - 01 - 1940



மறைவு 01 - 01 - 2026

### திருமதி சண்முகராஜா பாலபரமேஸ்வரி

வடமராட்சி கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகராஜா பாலபரமேஸ்வரி அவர்கள் நேற்று முன்தினம் (01.01.2026) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகராஜா (ஸ்தாபகர் குளோபல் கொமினிகேஷன்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்தையா- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகதாஸ், மற்றும் வாசுகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆதித்தன் (லண்டன்), அரவிந்தன் (தமிழர் விடுதலைக் கூட்டணி), அச்சுதன் (கனடா), பாமா ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவரஞ்சினி, சுதர்ஜினி, அனுசியா, சுந்தரலிங்கம் (கண்ணன் - கணபதி மில்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தர்ஷ்வின், தனிஷ்கா, ஹரிசன், சயனிதா, பிரகவி, அஸ்வின், அர்வின், அஸ்னி, ரதுர்ஷன், சாம்பவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (04.01.2026) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அவரது பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் ஊரணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 617 9076(மருமகன் - சுந்தரலிங்கம்)
077 194 9252 (மகன் - அரவிந்தன்)
021 226 3882

கணபதி மில்,
கொற்றாவத்தை.

தகவல் :
குடும்பத்தினர்

(C-4735)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்து மாணவர்...

திருகோணமலை கடற்கரையில் வைத்து படுகொலை செய்யப்பட்ட 5 மாணவர்களின் 20ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை (02) மாலை 6.00 மணியளவில் அவர்கள் படுகொலை செய்யப்பட்ட திருகோணமலை கடற்கரையில் உள்ள காந்தி சிலைக்கு முன்பாக இடம்பெற்றது.

இதன்போது படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் நிழற்படங்களுக்கு மலர்தூவி, விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

திருகோணமலை பிரதான கடற்கரைச் சந்தியிலுள்ள காந்தி சிலைக்கு அருகாமையாக மாலைப் பொழுதில் தினமும் இளைஞர்கள் நின்று கதைப்பது வழக்கம். 02.01.2006 அன்றைய மாலைப் பொழுதும் மாணவர்கள் பலர் அவ்விடத்தில் கூடிநின்று கதைத்துக்கொண்டிருந்தனர். அப்போது ஆட்டோ ஒன்றில் வந்த இனம் தெரியாத நபர்கள் அந்த இளைஞர்கள் மீது கைக்குண்டை வீசிவிட்டுக் கோட்டைப் பக்கமாகச் சென்றனர்.

கைக்குண்டு வெடித்ததில் திருமலை புனித ஜோசப் கல்லூரி மாணவரான யோகராஜா பூங்குழலோன் என்பவர் காயமடைந்தார். இவரை ஏனைய மாணவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல முற்பட்டபோது அப்பகுதிக்கு வந்த கடற்படையினர் அங்கு சுமார் 10 நிமிடங்கள் வரை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் கடற்கரையில் நின்ற மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடத் தொடங்கினர். இதற்கிடையில் காயமடைந்த மாணவர்களுக்கு அருகில் விரைந்த கடற்படையினர் அவர்களை நிலத்தில் விழுத்தி கண்மூடித்தனமாகத் தாக்கினர். மாணவர்கள் இச்சம்பவம் பற்றி தமக்கு ஏதும் தெரியாது எனக் கூறியபோதும் மாணவர்களைச் சப்பாத்துக் கால்களால் மிதித்து முழங்காலில் நிக்க வைத்து சுட்டுக் கொன்றதாக அக்காலத்தில் வெளிவந்த பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

இத்தகைய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் லோகிதராசா ரொகான், சண்முகராஜா சஜீந்திரன், மனோகரன் வசீகர், தங்கத்துரை சிவானந்தன், யோகராஜா கேமச்சந்திரன் ஆகியோர் கொல்லப்பட்டிருந்தனர். அத்துடன் குறித்த படுகொலைச் சம்பவம் தொடர்பில் செய்தி வெளியிட்டிருந்த சுகிர்தராஜன் என்ற ஊடகவியலாளரும் படுகொலை செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வேலன் சுவாமி...

9 மணிக்கு பலாலி பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு அழைப்பாணையில் கூறப்பட்டுள்ளது.

சட்டவிரோத தையிட்டி திஸ்ஸ விகாரையானது மக்களது காணிகளை அபகரித்து சட்டவிரோதமாகக் கட்டப்பட்டுள்ள விவகாரத்தில், அந்த விகாரையை அகற்றுமாறு கோரி இந்தப் போராட்டமானது முன்னெடுக்கப்பட்ட நிலையில் அது தொடர்பில் விசாரிக்க இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## திஸ்ஸ விகாரை...

கையை வட மாகாண காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் இரத்தினசிங்கம் முரளிதரன் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் மேலும் கூறுகையில், சிங்களவர்கள், இஸ்லாமியர்கள், தமக்கு ஒரு பிரச்சினை வரும்போது தங்களது பிரிவினைகளை மறந்து ஒற்றுமையாக ஒன்றுசேருகின்றனர்

ஆனால் நாம் பல்வேறு வகையில் பிரிந்திருக்கின்றோம். எல்லாவற்றையும் மறந்து இன்றைய தினம் தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான போராட்டத்திற்கு ஒன்றுதிரண்டு எதிர்ப்பு வெளியிட வேண்டும் எனக் கோரியுள்ளார். (ம-7)

## அனைத்து...

வருமானம் கொண்ட குடும்பங்களுக்கான 10200 மில்லியன் ரூபாய் வீட்டுத் திட்டம் மற்றும் மோதல் காரணமாக இடம்பெயர்ந்த சமூகங்களுக்கான 5000 மில்லியன் ரூபாய் வீட்டுத் திட்டம் ஆகியவற்றின் திட்டமிடல், தற்போதைய முன்னேற்றம் மற்றும் இலக்கு நிறைவு காலக்கெடுவை ஜனாதிபதி உன்னிப்பாக மதிப்பாய்வு செய்தார்.

தேசிய வீட்டுவசதி மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் முந்தைய ஆண்டுகளில் தொடங்கப்பட்டு இன்னும் முடிக்கப்படாத வீட்டுவசதித் திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. மேலும் அவற்றை விரைவாக முடிப்பதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. (ம-7)

## தையிட்டி...

விகாராதிபதி ஜின்தோட்டை நந்தாராம தேரரை யாழ்.மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் நேற்று வெள்ளிக்கிழமை தையிட்டி விகாரையில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

தையிட்டி திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி உரிமையாளர்களுடன் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் 31.12.2025 ஆம் திகதி கலந்துரையாடலில் ஈடுபட்டதற்கு அமைவாக, திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணியின் மட்டுப்பாடான அளவில் எல்லையிட்டு, அதனைத் தவிர்த்து ஏனைய காணிகளை கட்டம் கட்டமாக விடுவிப்பது தொடர்பாக - விகாராதிபதியுடன் அரசாங்க அதிபர் சந்தித்து தொடர் நடவடிக்கை எடுப்பது என கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அத் தீர்மானத்திற்கமைய, நேற்று அரசாங்க அதிபர் விகாராதிபதி அவர்களுடன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, கொழும்பில் உயர் மட்ட கலந்துரையாடல் நடக்க விருப்பதாகவும் அக்கலந்துரையாடலின் பின்னர் இது தொடர்பாக பொருத்தமான மேலதிக நடவடிக்கைகள் எடுக்க முடியும் எனவும் விகாராதிபதி அரசாங்க அதிபரிடம் தெரிவித்தார்.

விகாராதிபதி அவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் திரும்பும் வழியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் அரசாங்க அதிபர் கலந்துரையாடினார். (ம-7)

## லிட்ரோ காஸ் விலை உயராது

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு லிட்ரோ உள்நாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என லிட்ரோ காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய 12.5 கிலோ காஸ் சிலிண்டர்: ரூ.3,690 5 கிலோ கேஸ் சிலிண்டர்: ரூபா 1,482, 2.3 கிலோ கேஸ் சிலிண்டர்: ரூபா 694 என்ற தற்போதைய விலைகளையே தொடர்ந்தும் பேண தீர்மானித்துள்ளதாக அந்நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2026.01.02
சீட்டிழுப்பு இலக்கம் 6062
A 4 2 7 2 3 4
அத சம்பத
A 7 2 3 4
சீட்டிழுப்பு இலக்கம் 0637
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.01.02
சீட்டிழுப்பு இலக்கம் 176
கடகம் 10 17 46 2203

தன நிதானய
திகதி - 2026.01.02
சீட்டிழுப்பு இலக்கம் - 2092
Z 48 71 72 78 Z
Double Chance

மெகா பவர்
திகதி 02/01/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2410
J 12 15 29 39 62

ஜய JAYA
திகதி 2026.01.02
சீட்டிழுப்பு இலக்கம் 0330
K 7 5 0 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4304
சீட்டிழுப்பு திகதி 02.01.2026
K 05 34 59 76
K
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.01.02
சீட்டிழுப்பு இலக்கம் 1371
தனுசு 10 28 44 55 தனுசு

உத்தியோகபூர்வ முடிவுகள்
02.01.2026 வெற்றி வாரம் 0770
T 7 9 9 2 4 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.31,920,676.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3036
சீட்டிழுப்பு திகதி 2026.01.02 தினம் வெள்ளிக்கிழமை
09 43 46 55 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.86,360,438.40
DLB

சனிதா
திகதி 02.01.2026 வெற்றி வாரம் 5197
33 60 61 73 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,797,160.40
DLB

சசிரி
வெற்றி வாரம் 866
சீட்டிழுப்பு திகதி 02.01.2026
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 28 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4748
சீட்டிழுப்பு திகதி 02.01.2026 தினம் வெள்ளிக்கிழமை
20 22 24 59 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,298,072.00
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 27 14 35 39 42
2212
02.01.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.617,506,611.20
DLB

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 2862
சீட்டிழுப்பு திகதி 2026.01.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,773,649.60
ADA KOTIPATHI
29 43 44 72 Q
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சலூன் வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றிற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. வெளிமாவட்டத்தவர்களும் ஏற்றுக்கொள்ளப்படும். (உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்) (6461)

077 985 8327


# 519 பேருக்கு இறப்புச் சான்றிதழ்

(கொழும்பு)

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட அனர்த்தங்களால் உயிரிழந்த 519 நபர்களுக்கான இறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் 92 நபர்களுக்கான பதிவுச் சான்றிதழ்கள் இன்னும் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளன.

பேரிடர் மேலாண்மை மையத்தின் தரவுகளின் அடிப்படையில் இதுவரை 611 உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பதிவாளர் நாயகம் சஷி தேவி ஜலதீபன் தெரிவித்தார்.

நிலச் சரிவுகள் மற்றும் மண் மேடுகள் சரிந்து விழுந்ததால் தற்போது காணாமல் போன 164 பேரில் 92 நபர்களின் பெயர்கள் அவர்களின் அடையாளங்களை உறுதிப்படுத்த பிரதேச செயலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)


## மணப்பெண் தேவை

01.காரைநகர், இந்து, 1991, Engineering, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (55580)
02.சாவகச்சேரி, இந்து, 1995, Computer Science & Engineering, Software Engineer, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(54523)
03.யாழ், இந்து, 1995, A/L commerce, Company manager, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (54400)
04.அளவெட்டி, இந்து, 1995, Masters in Civil Engineering (UK), Cvil Engineer, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53654)
05.உரும்பிராய், இந்து, 1992, Bsc (Hons), Phd, Lecture, இலங்கை மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(54236)
06.கரவெட்டி, இந்து, 1989, Biomedical and Electrical Engineering, Software Engineer, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(33630)
07.வல்வெட்டி, இந்து, 1986, Bachelor in Busines Managment, Retile Manager of Super Market, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (50435)
08.மீசாலை, இந்து, 1985, Information Technology(IDM), Commercial employee/ preparotor, Divorce, France citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34746)
09.கொக்குவில், இந்து, 1993, Aeronotical Engineering Master Degree, Lead Fluid Dynamics Engineer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (33457)
10.காரைநகர், இந்து, 1985, Bsc Hons, Retail Business, Uk Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (33985)

எம்மிடம் எல்லா நாட்டிலும் எல்லா ஜாதியிலும் unmarriec, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு. (6476)

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com | 074 387 3686

## வேலையாட்கள் தேவை

Happy New Year

ஸ்ரீ மாருதி பிறின்டேர்ஸ்
நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

- கணினி பக்க வடிவமைப்பாளர் (Computer Page Layout Designer)
- மெசின் மைன்டர்

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் (C-4731)

இல.555, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

077 791 7680

## வீட்டுப்பணிப்பெண் தேவை

சாவகச்சேரியில் அமைந்துள்ள வீடொன்றிற்கு சகல வேலைகளும் செய்யக்கூடிய 25 -40 வயதிற்குட்பட்டோர் தேவை. தங்கி இருந்து வேலைசெய்ய வேண்டும். நல்ல சம்பளம் வழங்கப்படும். (1881)

077 124 8425
077 196 6541

## விற்பனைக்கு

பொங்கல் அகப்பை (சிரட்டை) விற்பனைக்கு உண்டு.

077 210 5286

## Voyzant இந்தியா கோவில்கள்

ஆறுபடை வீடு, திருப்பதி, திருநாகேஸ்வரம், இராமேஸ்வரம், சிதம்பரம், ஸ்ரீரங்கம், வைத்தீஸ்வரன், மேல்மருவத்தூர், திருவண்ணாமலை, மதுரை மீனாட்சி, திருவெண்ணெய்நல்லூர், சங்கரப்பாணி, திருவானைக்கா, காஞ்சிகாமாட்சி, ராமர்கோவில், திருக்கடவூர்

உட்பட 35 இற்கு மேற்பட்ட கோவில்கள்
189,000/= (ஒரு நபருக்கு) (10 பேர் கொண்ட குழு)
இந்தியா விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து – தங்குமிடம்
10 நாட்கள்
மேலதிக விபரங்களுக்கு: Voyzant (PVT) Ltd
புறப்படும் திகதிகள் 29.01.2026, 26.02.2026
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.(OLR Church க்கு அருகில்)
077 284 9535, 021 222 6866

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378, 076 097 3127


## மரண அறிவித்தல்

### திருமதி பூமாதேவி மதியாபரணம்



தோற்றம் 24.12.1934 | மறைவு 02.01.2026

உரும்பிராய் மேற்கினைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பூமாதேவி மதியாபரணம் அவர்கள் நேற்று (02-01-2026) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - ரோசம்மா தம்பதியரின் பாசமிகு புத்திரியும், காலஞ்சென்ற அம்பலவாணர் மதியாபரணம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - செல்லாச்சி தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான சத்தியவான், சிவன்யோகம், அருமைத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகநாதன் (ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர்), சந்திரிகா, மேனகா (முன்னைநாள் ஆசிரியர் - ஜேர்மன்), ரகுநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மகிந்தன், அகிலன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுகன்யா, கந்தசாமி (ஓய்வுபெற்ற சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்), கனகசிங்கம் (ஜேர்மனி), திருநிலைநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), வினோதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சாருகேசி - திவாஹரன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), சாருஜன் - விதுர்ஷிகா (Facility Management Executive, SLIIT NORTHERN UNI), சிந்துஜன் (விரிவுரையாளர் - SLIIT NORTHERN UNI), காலஞ்சென்ற விதுசன், சுயோதமி (ஆய்வாளர், Yarl IT Hub), சாரங்கி - கோபிதன் (பேருந்து நிலைய பொறுப்பதிகாரி, வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை), தர்சிகா (மருத்துவர், ஜேர்மனி), யதுசா (மருத்துவபீட மாணவி, பேராதனைப் பல்கலைக்கழகம்), பிரணா (மருத்துவபீட மாணவி, லண்டன்), மாதவன் (லண்டன்), அர்யுவன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அக்ஷஜன் (சிங்கப்பூர்), அத்விதன் (சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2026) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 10.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி பின்னர் பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

மானிப்பாய் வீதி, உரும்பிராய் மேற்கு.
077 844 5373
077 314 1265

தகவல்: குடும்பத்தினர் (1150)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். கரவெட்டி நெல்லியடி சிக்னல் சந்தியிலிருந்துகொடிகாமம் பிரதான வீதியில் 500m தூரத்தில் 18 பரப்புக் காணி இரண்டு பரப்பாக பிரித்து தரப்படும். குடியிருப்புச் சூழல், நன்னீரூற்று வளங்கள் உண்டு. இந்தக் காணிகளை மொத்தமாகவும் இரண்டாகவும் பிரித்தும் தரப்படும். (6425)

இன்னும் சில துண்டுகளே விற்பனைக்குள்ளது.

தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்:
077 639 4409, 076 153 2094

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 195/= | Max 3Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 249/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 270/= | |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 148/= | Max 5Kg |
| 1Kg றவை | - 282/= | |
| 1Kg தீட்டல்ப் பச்சை | - 230/= | |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2670/= | Max 1 |
| 1Kg செத்தல் NO 1 | - 850/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 210/= | Max 5 Kg |
| 01 குட்நைட் நுளம்புதிரி | - 135/= | ~~160/=~~ |
| 01 சந்தூர் சோப் | - 135/= | ~~165/=~~ |
| 70g பேபி சோப் | - 125/= | ~~145/=~~ |
| 01 ஓசன் மீன்ரின் | - 430/= | ~~480/=~~ |
| 01 மைலோ பால் | - 110/= | ~~130/=~~ |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும். (1884)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org